ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1853/52 - 2014 මාර්තු මස 15 වැනි සෙනසුරාදා - 2014.03.15

*1853/52 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 01/2013*

**2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகச் சட்டம்**

*19 ஆம் பிரிவின் கீழான விதிகள்*

*2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் பேரவைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு பேரவையினால் ஆக்கப்பட்டு அத்துடன் கூட்டுறவுத்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள்.*

*தலைவர்,*
*சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக்*
*கணக்காளர் நிறுவகம்.*

கொழும்பு,
*2014, மாச்சு 5.*

**விதிகள்**

1. இவ்விதிகள் 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவக (நிர்வாகம்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) ஒரு உறுப்பினருக்கு இவ் விதிகளின் கீழ் அனுப்பப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு அறிவித்தலும் அல்லது வேறு தொடர்பாட்டிலும் உறுப்பினரால் தொடர்பாடல்களுக்கான தனது முகவரி எனப் பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு இறுதியாக அறிவிக்கப்பட்ட முகவரிக்கு இலத்திரனியல் அஞ்சல் மூலம் அல்லது தபால் மூலம் அனுப்பப்படுதல் அல்லது விநியோகிக்கப்படுதல் வேண்டும்.

3. பேரவையின் ஒவ்வொரு கூட்டத்திற்கான அறிவித்தலும் -

(i) ஒவ்வொரு பேரவை உறுப்பினருக்கும் அறியப்பட்ட அவரின் முகவரிக்கு கூட்டம் இடம்பெறுவதற்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னராக விநியோகிக்கப்படுதல் வேண்டும் அல்லது தபால் மூலம் அல்லது மின் அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும் ;

(ii) இயன்றவரையில் கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்ற தோதான ஒரு நிகழ்ச்சி நிரலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. பேரவையின் முன் அனுமதியைப் பெறாமல் அடுத்தடுத்து நடைபெறுகின்ற பேரவையின் கூட்டங்கள் மூன்றிற்குச் சமுகமளிக்கத் தவறும் உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டங்களின் இறுதிக் கூட்டத் திகதியிலிருந்து அவரது பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

5. பேரவையின் உறுப்பினரொருவர் பதவியிலிருந்து பேரவைக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் எந்நேரத்திலும் பதவி துறக்கலாம் என்பதுடன், பேரவை அதனை ஏற்றுக்கொள்ளுவதன் மேல் பதவி துறத்தலானது வலுவுக்கு வருவதாகக் கருதப்படுதலும் வேண்டும். பேரவையானது குறித்தளிக்கப்பட்ட வலிதான காரணங்களுக்காக அத்தகைய பதவி துறத்தலை ஏற்க மறுக்கலாம்.

6. பேரவையின் ஏதேனும் கூட்டத்திலுள்ள எல்லா வினாக்களும் அல்லது பிரேரணைகளும், அதில் சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

7. பேரவைக் கூட்டத்தினதும் மற்றும் அதன் குழுக்களினதும் எல்லாத் தீர்மானங்களும் நடவடிக்கைகளும் பற்றிய கூட்டக்குறிப்புகள் பேணப்படுதல் வேண்டுமென்பதுடன் விடயத்திற்கேற்பத் தலைவரினால் அல்லது அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை வகித்த உறுப்பினரால் அக்கூட்டத்தில் அல்லது அடுத்துவரும் கூட்டத்தில் ஒப்பமிடப்பட்ட அத்தகைய ஏதேனும் கூட்டத்தின் கூட்டக்குறிப்புக்கள் அதில் குறிப்பிட்ட விடயங்களுக்குப் போதுமான சான்றாதலும் வேண்டும்.

8. பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் தலைவர் அக்கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் சம்மதத்துடன் கூட்டத்தைக் காலத்திற்குக்காலம் மற்றும் இடத்திற்கு இடம் ஒத்திவைக்கலாம். ஏதேனும் அத்தகைய ஒத்திவைத்த கூட்டத்தில், அத்தகைய ஒத்திவைத்தல் ஏற்பட்ட கூட்டத்தில் முடிவுறாதுவிட்டிருந்த விடயங்களைத் தவிர வேறு விடயங்கள் கையாளப்படுதல் ஆகாது. ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்திற்கான அறிவித்தல் எதுவும், அத்தகைய அறிவித்தலானது ஒத்திவைப்புத் தீர்மானம் அதனைத் தேவைப்படுத்தினாலன்றிக் கொடுக்கப்படுதல் ஆகாது.

9. நிறுவகத்தின் பொது இலச்சினை பேரவை காலத்திற்குக் காலம் தீர்மானிக்கின்றவாறான அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன், பேரவையின் அனுமதியுடனும் மற்றும் சபையின் இரு உறுப்பினர்களின் சமுகத்திலும் தவிர எத்தன்மைத்தானதுமான எந்தச் சாதனத்திலும் பொறிக்கப்படுதல் ஆகாது. பேரவையின் இரு உறுப்பினர்களும் பிரதான நிறைவேற்று அலுவலரும் சாதனத்தில் அவர்களின் பெயர்களை எழுதி ஒப்பமிடுதலும் வேண்டும். அவ்வொப்பமிடுதலானது சாட்சியாக, ஒப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும். அத்தகைய சாதனங்கள் எல்லாவற்றினதும் விபரங்களும் மற்றும் ஒப்பமிடுபவர்களின் பெயர்களும் கொண்ட பதிவேடொன்று பிரதான நிறைவேற்று அலுவலரினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

10. பேரவையானது காலத்திற்குக்காலம் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து மட்டும் அல்லது அதன் உறுப்பினர்களிடையேயிருந்தும் மற்றும் நிறுவகத்தின் உறுப்பினர்களிடையேயிருந்தும் பின்வரும் குழுக்களைக் குறித்துரைக்கப்பட்ட விடயங்களைக் கையாளுவதற்கென நியமித்து அக்குழுக்களின் நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கான விதிகளையும் ஆக்கலாம். பேரவை அது அவசியம் எனக் கருதுகின்றவாறு அத்தகைய ஏதேனும் குழுவை ஒன்றிணைப்பதற்கான அல்லது கலைத்து விடுவதற்கான தத்துவத்தையும் மற்றும் காரியக் குழுக்களையும் உப குழுக்களையும் அங்கீகரிப்பதற்கான தத்துவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) பரீட்சைகள் குழு ;
(ii) கல்வி மற்றும் பயிற்சிக் குழு;
(iii) மாநாடு மற்றும் கருத்தரங்குகள் குழு ;
(iv) தொடர்ச்சியான உயர்தொழில் அபிவிருத்திக் குழு ;
(v) ஒழுக்கநெறி மற்றும் ஒழுக்காற்றுக் குழு;
(vi) நிதி மற்றும் நிர்வாகக் குழு ;
(vii) கையேடு மற்றும் வெளியீட்டு மேம்படுத்தற் குழு ;
(viii) கணக்கீட்டு மற்றும் ஆகுசெலவுக் கணக்கீட்டு நியமங்கள் குழு ;
(ix) பகிரங்கத் துறைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் குழு ;
(x) தொழில் புரியும் கணக்காளர்கள் உயர்தொழில் குழு ;
(xi) கூட்டிணைப்பு ஆளுகை மற்றும் ஒருங்கிணைந்த அறிக்கையிடற் குழு ;
(xii) உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் அலுவல்கள் குழு ;
(xiii) வங்கி மற்றும் காப்புறுதிக் குழு ; அத்துடன்
(xiv) சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகள் மீதான குழு.

11. பேரவையானது காலத்திற்குக் காலம் நிறுவகத்தின் எல்லா உறுப்பினர்களின் நிரலை வெளியிடுதல் அல்லது வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

12. பேரவையானது ஒரு பிரதான நிறைவேற்று அலுவலரை நியமித்தல் வேண்டும். அவர், சட்டத்தின், அதன் கீழ் ஆக்கப்பட்ட விதிகளின் மற்றும் பேரவையால் காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் நியதிகளின்படி அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட அத்தகைய கடமைகளைப் புரிதலும் மற்றும் அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்தலும் வேண்டும்.

*13.* நிறுவகத்தின் நிறைவேற்று அலுவலரினதும், ஏனைய அலுவலர்களினதும் மற்றும் சேவையாளர்களினதும் சம்பளங்கள், படிகள் மற்றும் வேலை நியதி நிபந்தனைகள் காலத்திற்குக்காலம் பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானதாதல் வேண்டும்.

*14.* (அ) பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையிலுள்ள ஏதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் பேணப்பட்ட கணக்கில் அல்லது கணக்குகளில் நிறுவகத்தினால் அல்லது அதன் சார்பாகப் பெறப்பட்ட எல்லாப் பணமும் வைப்பிலிடப்படுதல் வேண்டும். வரையப்பட்ட எல்லாக் காசோலைகளும் பேரவை காலத்திற்குக்காலம் தீர்மானிக்கும் வரையறைகளுக்கு அமைவாக பேரவையின் இரு உறுப்பினர்களால் அல்லது பேரவையின் உறுப்பினர் ஒருவராலும் மற்றும் ஒன்றில் பிரதம நிறைவேற்று அலுவலரினாலும், அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினாலும் அல்லது பிரதம நிறைவேற்று அலுவலரினாலும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினாலும் ஒப்பமிடப்படுதல் வேண்டும் ;

(ஆ) நிறுவகத்தின் தேவைக்காக உடனடியாகத் தேவைப்படாத நிறுவகத்தின் நிதிகளை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்கு அல்லது அத்தகைய நிதிகளை ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வங்கியில் அல்லது உரிமமளிக்கப்பட்ட நிதி நிறுவனத்தில் தவணை வைப்புக்களில் வைப்புச் செய்வதற்குப் பேரவையானது தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*15.* நிறுவகத்தின் நோக்கங்களிற்கு முரண்படாத குறிப்பிட்ட நோக்கத்திற்கான கொடைகள், இறுதிவிருப்பாவணக் கொடைகள் அல்லது வேறு பண நன்கொடைகளை நிறுவகத்தின் சார்பாக பேரவையானது பெற்றுப் பயன்படுத்தலாம் அவற்றிலிருந்து பெறப்பட்ட தொகைகள் நிறுவகத்தின் பொது நிதிக்குப் புறம்பாக தனிவேறாகக் கணக்கீடு செய்யப்பட்டுக் கையாளப்படுதல் வேண்டும்.

*16.* நிறுவகமானது ஒவ்வொரு வருடம் தொடர்பிலும் அவ்வருடத்திற்கு அடுத்துவருகின்ற வருடத்தில் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்குப் பிந்தாமல் அல்லது பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய திகதிக்குப் பிந்தாமல் அத்தகைய வருடத்தின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைகின்ற ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கு மற்றும் ஐந்தொகை ஆகியன அடங்கிய ஆண்டுக் கணக்கைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அதன் பிரதிகள் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சருக்கும் மற்றும் நிறுவகத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்கப்படுதலும் வேண்டும்.

*17.* நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கான விண்ணப்பங்கள் பொருளளவில் இவ்விதிகளுக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள "M" படிவத்திலும் மற்றும் கூட்டு உறுப்பினராக வருவதற்கான விண்ணப்பங்கள் "F" படிவத்திலும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

*18.* ஆளெவரும், பின்வரும் தகைமையீனங்களை அவர் கொண்டிருந்தால் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகச் சேர்த்துக் கொள்ளப்படுதல் ஆகாது :-

(அ) இருபத்தியொரு வயதிற்கு மேற்படாதவராகவும் மற்றும் இலங்கைப் பிரசையல்லாதவராகவும் இருந்தால் அல்லது பேரவையினால் அங்கீகரிக்கப்படாத ஒருவராக இருந்தால் ;

(ஆ) தகைமையுடைய ஒரு நீதிமன்றத்தினால் சித்த சுவாதீனமற்றவர் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தால் ;

(இ) தகைமையுடைய ஒரு நீதிமன்றத்தினால் கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்கி முறிவடைந்தவர் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்து, அவரின் கடனிறுக்க வகையற்ற தன்மை அல்லது வங்கி முறிவு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தவிர்க்க முடியாத இழப்புக்கள் அல்லது இடர்பாட்டினால் ஏற்பட்டது என்னும் விளைவைக் கொண்ட சான்றிதழொன்று கணக்காய்வாளரொருவரிடமிருந்து பெறப்பட்டிருந்தால் தவிர ; அல்லது

(ஈ) தகைமையுடைய ஒரு நீதிமன்றத்தினால் இலங்கையில் அல்லது வேறெங்கிலாவது ஒழுங்கீனமான நடத்தை சம்பந்தப்பட்டதும், மறியல் தண்டனையினால் தண்டிக்கப்படக்கூடிய ஏதேனும் தவறிற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு, அத்தீர்ப்புக்கு எதிராக மேல் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யப்பட்டுக் குற்றத் தீர்ப்பானது நீக்கப்படாதிருந்தால் அல்லது இலங்கைக் குடியரசின் சனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்படாதிருந்தால்,

*19.* 18 ஆம் விதியின் பந்தி (ஆ) அல்லது பந்தி (இ) அல்லது பந்தி (ஈ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமையீனங்களுக்கு ஆளாகவிருக்கின்ற நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள எவரேனும் ஆளை உறுப்பினர் நிரலிலிருந்து பேரவை நீக்குதல் வேண்டும்.

ஆயினும், எவ்வாறாயினும் அத்தகைய நீக்குதலானது அத்தகைய ஆள் சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளராகச் செயற்படத் தகுதியுடைய ஆள் ஒருவர் எனத் திருப்தியடைந்தால் பேரவை அத்தகைய ஆளை உறுப்பினராக மீண்டும் நிரலில் சேர்ப்பதனைத் தடை செய்தல் ஆகாது.

*20.* பேரவையானது நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள தனியாள் எவரும் தொழில்சார் துர்நடத்தைக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டார் என்ற காரணத்தினால் அவர் சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளராக உயர் தொழிலைப் புரிவதற்கு தகுதி அற்றவர் எனத் திருப்தியடைந்தால் அவரை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கலாம்.

21. நிறுவகத்தின் இணை உறுப்பினர்களைச் சேர்ப்பதும், 5 ஆண்டுகளுக்குப் பின்னர் கூட்டு உறுப்பினர்களைத் தேர்வு செய்வதும் பேரவையினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் காலத்துக்குக் காலம் பேரவையினால் விதிக்கப்பட்ட, நிபந்தனைகளை அவர் பூர்த்தி செய்துள்ளாரெனவும் மற்றும் 18 ஆம் விதிக்கு இணங்கியொழுகியுள்ளாரெனவும் பேரவையைத் திருப்தி செய்வதுடன், அவ்வாறு சேர்க்கப்படுவதற்கு அல்லது தேர்வு செய்யப்படுவதற்கான, பேரவையால் கருதப்பட்டவாறான அவரது தகுதிக்கான அத்தகைய சான்றுகளைக் காண்பித்தலும் வேண்டும்.

22. ஒரு ஆள் நிறுவகத்தின் இணை உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதன் மீது அல்லது கூட்டு உறுப்பினரொருவராகத் தெரிவு செய்யப்படுவதன் மீது அவர் நிறுவகத்தின் கூட்டு இலச்சினையின் கீழான அத்தகைய விளைவைக் கொண்ட உறுப்பாண்மைச் சான்றிதழ் ஒன்றுக்கு உரித்துடையவர் ஆதல் வேண்டும்.

23. ஒவ்வொரு உறுப்பாண்மைக்கான சான்றிதழும் நிறுவகத்தின் சொத்தாக இருப்பதுடன், எந்த நேரத்திலும் அதை அழைக்கவும் மற்றும் அதைக் காண்பிப்பதைக் கட்டாயப்படுத்தவும் மற்றும் நிறுவகத்திடம் ஒப்படைக்குமாறு கட்டாயப்படுத்தவும் பேரவைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். உறுப்புரிமையிலிருந்து இல்லாதொழிகின்ற ஆள் ஒவ்வொருவரும், பேரவையினால் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரினால் அவ்வாறு தேவைப்படுத்தப்படும்போது அவரது உறுப்பாண்மைச் சான்றிதழை இல்லாமல் செய்வதற்கெனப் பிரதான நிறைவேற்று அலுவலரிடம் திரும்பக் கொடுத்தல் வேண்டும்.

24. பேரவையானது அதனது பூரணமான தன்மதியின்படி விதிக்கக்கூடிய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகவும் மற்றும் 18 ஆம் விதிக்கு அமைவாகவும் பேரவையின், அபிப்பிராயப்படி நிறுவகத்திற்குச் சமமான படி நிலையிலுள்ளதெனப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட எப்பெயர் கொண்டு அழைக்கப்படினும் சரி, வேறு ஏதேனும் ஒரு கணக்காளர் நிறுவகத்தின் அல்லது கணக்காளர் குழுமத்தின் உறுப்பினர் என பேரவையின் திருப்திக்கு எண்பிக்கக்கூடியவரான எவரேனும் விண்ணப்பதாரியை நிறுவனத்தின் உறுப்பாண்மைக்குச் சேர்த்துக் கொள்ளலாம்.

25. நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கு விண்ணப்பம் செய்பவர் பேரவையினால் தீர்மானிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். இக்கட்டணங்கள் பேரவையினால் காலத்திற்குக்காலம் மீளாய்வு செய்வதற்கு அமைவானதாகும் :-

| | CMA மாணவர்கள் (ரூபா) | ஏனைய விண்ணப்பதாரிகள் (ரூபா) |
|---|---|---|
| இணை உறுப்பினராகச் சேர்த்தல் | 9,500 | 17,500 |
| கூட்டு உறுப்பினராகத் தேர்வு செய்தல் | 5,000 | 18,500 (நேரடியாக கூட்டு உறுப்பானன்மை) |
| மீளப் புதுப்பித்தல் - இணை உறுப்பினர்கள் | 5,500 | 5,500 |
| மீளப் புதுப்பித்தல் - கூட்டு உறுப்பினர்கள் | 6,500 | 6,500 |

26. உறுப்பாண்மையைப் மீளப் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் R இல் இருத்தலுடன், பேரவையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான தொடர்ச்சியான உயர்தொழில் அபிவிருத்தி சம்பந்தமான அத்தகைய விதிகளுக்கு இணங்கியொழுகியதாக இருத்தலும் வேண்டும்.

27. பேரவை அதன் தன்மதிப்படியும் மற்றும் அவர் இதற்கான அட்டவணையில் தரப்பட்ட I என்னும் படிவத்தில் விண்ணப்பிப்பதன் மேலும், 70 வயது நிரம்பியவரும் தொழில் செய்தலிலிருந்து அல்லது வியாபார நடவடிக்கையிலிருந்து இளைப்பாறியவருமான எவரேனும் உறுப்பினரை கொடுப்பனவு செய்யப்படவேண்டிய மீளப் புதுப்பித்தல் கட்டணமாக காலத்திற்குக் காலம் பேரவை தீர்மானித்தவாறு குறைவான கட்டணத்தை அனுமதிக்கலாம் :

ஆயினும், எழுபத்தைந்து வயது நிரம்பிய உறுப்பினர்கள் மீளப் புதுப்பித்தல் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

28. மாச்சு 1 ஆந் திகதிக்கு முன்னர் அல்லது அத்தகைய நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் உறுப்புரிமையைப் மீளப் புதுப்பிக்கத்தவறிய உறுப்பினர்கள் பற்றி எடுக்கப்படவேண்டிய அவசியமான நடவடிக்கைக்காக பேரவைக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும். மீளப் புதுப்பித்தல் கட்டணத்தைக் குறிப்பிட்ட திகதிக்கு முன் செலுத்தத் தவறியமைக்காக உறுப்புரிமையையை இழந்த ஒருவர் பேரவையின் தீர்மானத்திற்கு அமைவாக சபையினால் தீர்மானிக்கப்பட்ட தண்டப்பணம் அடங்கலாக நிலுவையாகவுள்ள எல்லாக் கொடுப்பனவுகளும் செலுத்தப்படுவதன் மேல் உறுப்புரிமையை மீளப் பெறுதல் முடியும்.

29. நிறுவகத்தின் எல்லா உறுப்பினர்களும் காலத்திற்குக் காலம் பேரவையினால் தீர்மானிக்கப்பட்ட தொடர்ச்சியான உயர்தொழில் அபிவிருத்தி (CPD) தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுமாறு தேவைப்படுகின்றார்கள்.

30. பேரவையின் அறிக்கையும், நிறுவகத்தின் கணக்கறிக்கையையும் மற்றும் நிறுவனத்தின் கணக்காய்வாளரின் அறிக்கையுடன் பெற்றுக் கவனத்தில் கொள்வதற்காக நிறுவகத்தின் உறுப்பினர்களின் ஆண்டுப் பொதுக்கூட்டம் ஒன்று ஒவ்வொரு வருடமும் பேரவை தீர்மானிக்கப்பட்ட இடத்திலும், திகதியிலும் நடாத்தப்படுதல் வேண்டும்.

31. நிறுவகத்தின் உறுப்பினர்களின் ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக பதின்நான்கு நாட்களுக்குக் குறையாமல் பிரதான நிறைவேற்று அலுவலர் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கூட்டத்திற்கான திகதி, நேரம், இடம் மற்றும் கையாளப்படும் விடயங்கள் அடங்கிய அறிவித்தலை ஆண்டு அறிக்கையுடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். நிறுவகத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் பத்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

32. நிறுவகத்தின் உறுப்பினர்களின் ஏதாவதொரு ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் குறிப்பிடப்பட்ட நேரத்திலிருந்து அரை மணித்தியாலயத்திற்குள் பத்து உறுப்பினர்கள் நேரடியாகச் சமுகம் தராமல் இருப்பின், அக்கூட்டமானது பதின்நான்கு நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் அதே இடத்தில், அதே நேரத்தில் நடாத்தப்படுதல் வேண்டும். கூட்டம் ஒத்திவைக்கப்பட்ட திகதியில் பத்து உறுப்பினர்களுக்குக் குறைவாகச் சமுகமளித்திருத்தல் எவ்வாறிருப்பினும் சரி, கூட்டம் அதன் நடவடிக்கைகளைத் தொடருதல் வேண்டும்.

33. இவ்விதிகளில் சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"சட்டம்" என்பது, 2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகச் சட்டம் என்று பொருளாகும்.

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, 14 ஆம் விதியின் நோக்கத்திற்காக பேரவையினால் பெயர் குறிக்கப்பட்ட நிறுவகத்தின் ஒரு அலுவலர் என்று பொருளாகும்.

"தலைவர்" என்பது, ஏதேனும் கூட்டத்தில் தலைமை தாங்குகின்ற ஓர் ஆள் என்று பொருளாகும்.

"பிரதான நிறைவேற்று அலுவலர்" என்பது சட்டத்தின் பிரிவு 15 (1) இன் கீழ் பேரவையால், நியமிக்கப்பட்ட பிரதான நிறைவேற்று அலுவலர்கள் என்று பொருளாகுமென்பதுடன், அவ்வப்போது முறையாக பதிற்கடமையாற்றும் எவரேனும் அலுவலர் அல்லது ஒரு ஆளையும் உள்ளடக்கலாம்.

"பேரவை" என்பது சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவதத்தின் பேரவை என்று பொருளாகும்.

"நிறுவகம்" என்பது, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம் என்று பொருளாகும்.

"உறுப்பினர்" என்பது, நிறுவகத்தின் ஓர் உறுப்பினர் என்று பொருளாகும்.

**அட்டவணை**

(விதி 17)

படிவம் M

பிரதான நிறைவேற்று அலுவலர்,
இலங்கைச் சான்றுப்படுத்தப்பட்ட
முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம்,
இல. 29/24, விசாக்கா வீதி,
கொழும்பு 04.

**நிறுவகத்தின் உறுப்புரிமைக்கான விண்ணப்பம்**

இலங்கைச் சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவத்தின் உறுப்பினராகச் சேருவதற்கு இதன் மூலம் நான் விண்ணப்பிக்கின்றேன். பின்வரும் விவரங்களைச் சமர்ப்பிப்பதுடன் எனது அங்கத்துவ அனுமதிக் கட்டணமாக ரூபா ........................................................ இற்கான காசோலையும் சேர்த்து அனுப்பியுள்ளேன்.

1. விண்ணப்பக்காரரின் முழுப்பெயர் :----.

2. வியாபாரத்தின் பெயர் (ஏதும் இருப்பின்) :----.

3. தபால் முகவரி :---.

4. பிறந்த திகதி :----.

5. தொழில்சார் கணக்கியல் தகமைகள் :----.

6. விண்ணப்பதாரர் தொடர்ச்சியாக தொழில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள காலம் :----.

(இயைபான நிறுவகத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளின் பிரகாரம் தொழில் பயிற்சி பற்றிய விவரங்கள் இணைக்கப்படுதல் வேண்டும் ):----.

7. தேசியம் :----.

8. விண்ணப்தார் ஒரு இலங்கைப் பிரசையாக இல்லாவிடத்து :----.

(i) வதிவிட அனுமதிப்பத்திர இலக்கத்தைக் குறிப்பிடவும் ;
(ii) இலங்கையில் வசித்த காலப்பகுதியைக் குறிப்பிடவும் ;

9. விண்ணப்பதாரர் வெளிநாட்டுக் கணக்காளர் நிறுவகமொன்றின் உறுப்பினர் ஒருவராக இருக்குமிடத்து -

அத்தகைய நிறுவகம் பற்றிய விவரங்கள் :----.

10. ........................................................................................................................................................ ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவக (நிர்வாகம்) விதிகளின் 18 ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகமையின்மைகளுக்கு உட்படவில்லை என வெளிப்படுத்துகின்றேன்.

.............................................
ஒப்பம்.

திகதி :.................................

(விதி 17)

படிவம் F

பிரதான நிறைவேற்று அலுவலர்,
இலங்கைச் சான்றுப்படுத்தப்பட்ட
முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம்,
இல. 29/24, விசாக்கா வீதி,
கொழும்பு 04.

**சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர்**
**நிறுவகத்தின் கூட்டு உறுப்பினர் தேர்வுக்கான விண்ணபம்**

இலங்கைச் சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவத்தின் உறுப்பினர் *..................................................................... ஆகிய கூட்டு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கு இதன் மூலம் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதுடன் எனது கூட்டு உறுப்பினர் தேர்வுக் கட்டணமாக ரூபா .................................... இற்கான காசோலையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

.............................................
ஒப்பம்.

திகதி :.................................

1. முகவரி :---.

2. மின் அஞ்சல் :----.

3. தொலைபேசி/தொலைநகல் :----.

* முழுப்பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(விதி 26)

படிவம் R

பிரதான நிறைவேற்று அலுவலர்,
இலங்கைச் சான்றுப்படுத்தப்பட்ட
முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம்,
இல. 29/24, விசாக்கா வீதி,
கொழும்பு 04.

**சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர்**
**நிறுவகத்தின் கூட்டு உறுப்பினர் தேர்வுக்கான விண்ணபம்**

இலங்கைச் சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவத்தின் உறுப்பினர் *....................................................... ............... ஆகிய கூட்டு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கு இதன் மூலம் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதுடன் எனது கூட்டு உறுப்பினர் தேர்வுக் கட்டணமாக ரூபா .................................... இற்கான காசோலையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவக (நிர்வாகம்) விதிகளின் 18 ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியீனங்களுக்கு உட்படவில்லை என வெளிப்படுத்துகின்றேன்.

.............................................
ஒப்பம்.

திகதி :.................................

* முழுப்பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(விதி 27)

படிவம் R- 1

பிரதான நிறைவேற்று அலுவலர்,
இலங்கைச் சான்றுப்படுத்தப்பட்ட
முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம்,
இல. 29/24, விசாக்கா வீதி,
கொழும்பு 04.

**27 ஆம் விதியின் கீழான உறுப்புரிமையைப்**
**புதுப்பிப்பதற்கான கட்டணத்தின் குறைப்பிற்கான விண்ணபம்**

........................................... ஆகிய நான், சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவத்தின் எனது உறுப்புரிமையைப் புதுப்பிக்கும் கட்டணத்தை ரூபா இற்குக் குறைப்பதற்கு இதன் மூலம் விண்ணப்பம் செய்து குறைக்கப்பட்ட கட்டணமாக ரூபா .................................................... ............... இற்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன்.

2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவக (நிர்வாகம்) விதிகளின் 18 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியின்மை எதற்கும் உட்பட்டிருக்கவில்லை என்று வெளிப்படுத்துகின்றேன்.

நான் 70 வயதைத் தாண்டியுள்ளேன் என்றும் மற்றும் தொழில் புரிதலிலிருந்தும் மற்றும் ஏனைய வியாபார நடவடிக்கையிலிருந்தும் இளைப்பாறியுள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

.............................................
ஒப்பம்.

திகதி :.................................

* முழுப்பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

3- 1026/1

*ச.வ.பீ. 01/2013*

**2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகச் சட்டம்**

*19 ஆம் பிரிவின் கீழான விதிகள்*

*2009 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகச் சட்டத்தின் 19 ஆம் பிரிவினால் சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் பேரவைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு பேரவையினால் ஆக்கப்பட்டதும் மற்றும் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள்.*

எம். எம். வட்டவள,
*தலைவர்,*
*சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம்.*

கொழும்பு,
*2014, மாச்சு 5.*

**விதிகள்**

*1. இவ்விதிகள் 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவக (அனுமதிகளும் பரீட்சைகளும்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. நிறுவகத்தின் இணை உறுப்புரிமைக்கு இட்டுச் செல்லும் எவையேனும் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கும் மற்றும் இவ்விதிகளால் தேவைப்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட செயல்முறைப் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்குமான தகைமையைப் பெறுவதற்கு ஆள் ஒருவர் நிறுவகத்துடன் ஒரு மாணவனாகத் தன்னைப் பதிவு செய்தல் வேண்டும். (இதனகத்துப்பின்னர் அவர் இவ்விதிகளில் ஒரு "பதிவு செய்யப்பட்ட மாணவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.)*

*3. நிறுவகத்தில் மாணவர் ஒருவராகப் பதிவு செய்வதற்கு நிறுவகத்தால் செய்யப்பட்ட பகிரங்க விளம்பரத்திற்கான பதிலிறுப்பாக ஆள் ஒருவர் தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து நிறுவகத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் பேரவையானது இரு முறை விண்ணப்பம் கோருகின்ற விளம்பரத்தை குறைந்தது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளிவரும் புதினப் பத்திரிகை ஒவ்வொன்றிலும் அதன் வெளியீடு ஒன்றிலாவது வெளியிடுவித்தல் வேண்டும்.*

*4. ஒரு மாணவனாகப் பதிவு செய்வதற்கு அல்லது விலக்களிப்பைப் பெறுவதற்கு கவனத்திற் கொள்ளப்படுவதற்கு ஆள் ஒருவர் பின்வரும் கல்விசார் அல்லது உயர் தொழில்சார் தகைமைகளில் ஏதேனும் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-*

*(1) (அ) ஆங்கில மொழி மூலத்திற்கு -*

*க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் இரு பாடங்களில் சித்திகளுடன், க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியும் கணிதத்தில் சாதாரண சித்தியும் ;*

*(ஆ) சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலத்திற்கு-*
*க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் இரு பாடங்களில் சித்திகளுடன், க. பொ. த. சாதாரணதரப்பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திலான சாதாரண சித்திகள்.*

*(2) விலக்களிப்புடன் கூடிய பதிவிற்கு -*

*(அ) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அல்லது பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் பல்கலைக்கழகத்தின் இயைபான பட்டம் ;*

*(ஆ) இலங்கை அரச கணக்காளர் சேவை உறுப்புரிமை ;*

*(இ) ஐக்கிய இராச்சியப் பட்டயச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சை ;*

*(ஈ) ஐக்கிய இராச்சிய நிதிக் கணக்காளர் இறுதிப் பரீட்சை ;*

*(உ) ஐக்கிய இராச்சிய சர்வதேச கணக்காளர் கழகத்தின் இறுதிப் பரீட்சை ;*

(ஊ) இலங்கை அல்லது இலண்டன் வங்கியாளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சை ;

(எ) பட்டயச் சந்தைப்படுத்துநர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சை ;

(ஏ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சை ;

(ஐ) உயர்தொழில் சார், பல்கலைக்கழகம் சார், சீவியத் தொழில்சார் பகுதித் தகைமைகள் அல்லது வேறு தகைமைகள் விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படை கவனத்திற்கு எடுக்கப்படும் ;

(ஒ) இலங்கைக் கணக்கியல் தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் இறுதிப் பரீட்சை ;

(ஓ) சர்வதேச நிர்வாகக் கணக்காளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சை (IAB) ;

(ஔ) தொழில் புரிபவர்களும், 21 வயதிற்கு மேற்பட்டவர்களும், கணக்கியல் குழலில் இருவருட அனுபவமுடையவர்களும் மற்றும் தொழில் தருநரால் விதந்துரைக்கப்பட்டவர்களுமான ஆட்கள் ;

(க) இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் உயர் தேசிய கணக்கீட்டு திப்புளோமா அல்லது முகாமைத்துவ திப்புளோமா இறுதிப் பரீட்சை ;

(ங) ஐக்கிய இராச்சிய பட்டயச் சான்றுப்படுத்தப்பட்ட நிறுவகத்தின் இறுதிப் பரீட்சை ;

(ச) ஐக்கிய இராச்சியப் பட்டய முகாமைக் கணக்காளர் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சை ;

(ஞ) காலத்திற்குக் காலம் நிறுவகத்தின் பேரவையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதாவது தகைமை.

ஆயின், எவ்வாறாயினும் பேரவையானது காலத்திற்குக்காலம் அனுமதிக்கப்படுவதற்கான தகைமைகளை மீளாய்வு செய்வதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. பேரவையினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படவேண்டிய ஆரம்பப் பதிவுக் கட்டணத்தையும் ஆண்டுக்கான புதுப்பித்தல் கட்டணத்தையும் செலுத்தியிருந்தாலன்றி, ஆள் ஒருவர் நிறுவகத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு மாணவனாகக் கருதப்படுதல் ஆகாது.

6. புதுப்பித்தல் கட்டணம், அது எந்த ஆண்டு தொடர்பில் கொடுக்குமதியாக வந்ததோ அந்த ஆண்டின் மார்ச்சு மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவு செய்யப்படாவிட்டால் கருதப்பட்ட ஆளின் பதிவு காலாவதியாகிவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

7. முன் கூறப்பட்ட விதியின் நியதிகளின்படி அவரது பதிவு காலாவதியாயுள்ளவரான ஆளொருவர், குற்றப்பணமாக இரண்டாயிரம் ரூபா அல்லது பேரவையினால் அவர் மீது விதிக்கப்படத் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய வேறு தொகை அடங்கலாக நடைமுறையிலுள்ள கட்டணப்படி கொடுக்குமதியாகவுள்ள எல்லாக் கொடுப்பனவையும் முழுமையாகச் செலுத்தினால் பேரவையின் தற்றுணியின் மீது அவரது பதிவானது மீளவும் அளிக்கப்படலாம்.

8. நிறுவகத்தின் பேரவையானது பதிவு செய்யப்பட்ட எல்லா மாணவர்களினதும் பதிவேடு ஒன்றைப் பேணுதல் வேண்டும்.

9. பதிவு செய்யப்பட்ட மாணவர் ஒருவர், பதிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஏற்புடையதென நிறுவகத்தின் பேரவையால் தீர்மானிக்கப்பட்ட எவையேனும் நடத்தை பற்றிய விதிகளை அனுசரித்து நடத்தல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட மாணவர் ஒருவர் அத்தகைய ஏதேனும் நடத்தை பற்றிய விதியை அனுசரிக்கத் தவறினால் அந்த மாணவர் பேரவையினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு ஆளாவார்.

**பரீட்சைகள் - பொதுவானது**

10. (1) (அ) பேரவை அதன் உறுப்பினர்களிடையேயிருந்து பரீட்சைக் குழு என அழைக்கப்படவேண்டிய குழு ஒன்றை இவ்விதிகளில் விதித்துரைக்கப்பட்டவாறு பரீட்சைகள் நடாத்தும் நோக்கத்திற்கு நியமித்தல் வேண்டும். இக்குழு பேரவையின் ஐந்துக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டிருப்பதுடன், அவர்களில் ஒருவரைத் தவிசாளராக நியமித்தலும் வேண்டும். இவ்வாறு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரும் பேரவை தீர்மானித்தவாறு மேலும் ஒரு காலப்பகுதிக்குப் பதவியில் நீடிக்கப்பட்டாலன்றி, ஒரு வருட காலத்திற்கு பதவியிலிருத்தல் வேண்டும். பரீட்சைக் குழுவின் கூட்டத்தற்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும் ;

(ஆ) பேரவையானது, அதன் உறுப்பினர்கள் எல்லோராலும் முறையாகப் பூர்த்தி செய்யப்படவேண்டிய வெளிப்படுத்துகையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பரீட்சைப் பெபேறுகளை அல்லது பரீட்சைகள் தொடர்பான வேறு ஏதேனும் கருமங்களைக் கவனத்தில் கொள்கையில் ஏதேனும் பகிரங்க அல்லது தனியார் நிறுவகத்திலான இலங்கை சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் பரீட்சைக்கான விரிவுரைகளை நடாத்துவதில் ஈடுபட்டுள்ளவரான எவரேனும் பேரவையின் உறுப்பினரைத் தவிர்த்தல் வேண்டும் ;

(இ) பேரவையானது காலத்திற்குக்காலம் ஏதேனும் பரீட்சையின் அமைப்பை மாற்றுவதற்கு அல்லது திரிபு செய்வதற்கான தத்துவத்தைக் கொண்டிரும்.

(2) பரீட்சைக் குழு பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) இவ்விதிகளில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பரீட்சைகளினதும் காலம் மற்றும் இடம் ஆகியவற்றை நெறிப்படுத்துவதுடன் அத்தகைய ஒவ்வொரு பரீட்சையையும் நடாத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய வேறு ஒழுங்குகளையும் மேற்கொள்ளுதல் ;

(ஆ) காலத்திற்குக்காலம் ஒவ்வொரு பரீட்சையும் தொடர்பான அமைப்பு, பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்களை பேரவையின் அங்கீகாரத்துடன் தீர்மானித்தல் ;

(இ) அதன் உறுப்பினர்களிடையேயிருந்து அல்லது விதி 13 இன் கீழ் பேரவையால் நியமிக்கப்பட்ட பரீட்சையாளர்கள், சமநிலைப்படுத்துநபர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்கள் குழாமிலிருந்து அது பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறு பரீட்சையாளர்கள், சமநிலைப்படுத்துநர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தல் ;

(ஈ) பரீட்சை நடக்கின்ற ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பரீட்சைக்கும் பரீட்சையை மேற்பார்வை செய்வதற்குப் பொருத்தமான ஆட்களை மேற்பார்வையாளர்களாக நியமித்தல் ;

(உ) ஒவ்வொரு பரீட்சையின் பரீட்சையாளர்கள் மற்றும் சமநிலைப்படுத்துநர்கள் ஆகியோரின் அறிக்கையை கருத்திற் கொள்ளவும் அதை ஏற்றுக்கொள்ளுதல், நிராகரித்தல் அல்லது அது அவசியமெனக் கருதுகின்ற அத்தகைய மாற்றங்கள், திருத்தங்களுக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளுதல் ;

(ஊ) ஒவ்வொரு பரீட்சையின் முடிவுகளையும் பேரவைக்கு அங்கீகாரத்துக்கென அறிக்கையிடல் ; அத்துடன்

(ஏ) பரீட்சைக் குழுவினால், அத்தகைய உப குழுவிற்குக் குறித்தளிக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ளவென உறுப்பினர்களிடையேயிருந்து அல்லது தகைமையுடையவர்களும் பொருத்தமானவர்களுமான வேறு ஆட்களிடையேயிருந்து உப குழுக்களை நியமித்தல் ;

ஆயின், எவ்வாறாயினும், இந்தப் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியில், முரணாக எது எவ்வாறாயினும், விதிவிலக்கான சூழ்நிலைகளின் தேவைகளுக்கு ஏற்ப பரீட்சைக் குழுவானது பேரவையின் முதற் கூட்டத்தில் அல்லது பிந்திய கூட்டத்தில் உறுதி செய்யப்படுவதற்கு அமைவாக தகைமையுள்ளவர்களும் தகுதியுடையவர்களுமான வேறு எவரேனும் ஆட்களை பரீட்சையாளர்களாகவும் சமநிலைப்படுத்துநர்களாகவும் நியமிக்கலாம்.

(3) காலத்துக்குக்காலம் பேரவையினால் தீர்மானிக்கக்கூடியவாறு, பரீட்சையாளர்கள் சமநிலைப்படுத்துநர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு கட்டணமானது கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இவ்விதிகளின கீழ் நியமிக்கப்பட்ட பரீட்சையாளர்கள், சமநிலைப்படுத்துநர்கள் பேரவை அங்கீகரிக்கக்கூடியவாறான எழுத்துப் பந்திரம் மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ, அல்லது கணினி சார் பரீட்சை முறையிலோ அல்லது வேறு உதவியுடனோ பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளைப் பரீட்சிக்கலாமென்பதுடன் பரீட்சை நடைபெற்றதற்குப் பின்னர் இயன்றளவு விரைவாகப் பரீட்சைக் குழுவுக்கு முடிவுகளை அறிக்கையிடுதலும் வேண்டும்.

(5) தொழில்நுட்பப்படிநிலை (மட்டம் 1), இடைநிலைப்படிநிலை (மட்டம் 2) உயர் தொழில் படிநிலை I (மட்டம் 3) அல்லது உயர் தொழில் படிநிலை II (மட்டம் 3) ஆகியவற்றில் சித்திபெற்ற ஒவ்வொரு பரீட்சார்த்திகளுக்கும், படிநிலைக்கேற்றவாறு, பரீட்சையில் சித்திபெற்றமைக்கான சான்றிதழொன்று வழங்கப்படுதல் வேண்டும். அச்சான்றிதழ் ஒவ்வொன்றும் பேரவை உறுப்பினர் இருவராலும் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலராலும் ஒப்பமிடப்படுதல் வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட எல்லாச் சான்றிதழ்களும் பற்றிய பதிவேடு ஒன்றை பிரதான நிறைவேற்று அலுவலர் பேணி வரச் செய்தல் வேண்டும்.

11. ஏதேனும் பரீட்சையின் பொருட்டு பரீட்சைக் கட்டணம் செலுத்திய பின் ஒரு பரீட்சார்த்தி தனது பதிவை மீளப்பெறின் அல்லது பரீட்சைக்கு சமுகம் தரத் தவறின், கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டணத்தை அவர் மீளப்பெற முடியாது.

ஆயினும், எவ்வாறாயினும், சுகயீனம் காரணமானதாகவிருக்கின்ற விடயத்தில் ஒரு அரசாங்க மருத்துவ அலுவலரிடமிருந்து மருத்துவச் சான்றுப் பத்திரமொன்றைச் சமர்ப்பிப்பதன் மேல் பேரவையானது அத்தகைய கட்டணத்தின் அரைவாசியை உடனடுத்து வருகின்ற பரீட்சைக்கெனப் பரீட்சார்த்தியின் வரவிற்குக் கைமாற்றம் செய்யலாம்.

12. பரீட்சைக் குழு வேறு விதமாகப் பணித்தால் தவிர ஒரு பரீட்சையில் சித்திபெறத் தவறிய எவரேனும் ஆள் அடுத்துவரும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் அத்தகைய பரீட்சைக்கு மீண்டும் தோற்றலாம். பரீட்சைக் குழு அத்தகைய எவரேனும் பரீட்சார்த்தியை ஏதேனும் அடுத்துவரும் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்க மறுத்தால் அவர் பேரவைக்கு, குழுவின் மறுப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்யலாமென்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டின் மீதான பேரவையின் தீர்மானம் இறுதியானதாதலும் வேண்டும்.

13. பேரவையானது பரீட்சையாளர்கள், சமநிலைப்படுத்துநர்கள் அல்லது மொழி பெயர்ப்பாளர்களைக் கொண்ட குழாத்தை நியமிக்க வேண்டும். பரீட்சைக் குழுவினால் அழைப்பு விடுக்கப்படும்போது அவர்கள் அப்பதவிகளைக் கொண்டிருக்கலாம், காலத்திற்குக்காலம் பேரவை தீர்மானிக்க வேண்டியவாறான அத்தகைய கட்டணமானது பரீட்சையாளர்கள், சமநிலைப்படுத்துநர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்கள் ஆகியோருக்குக் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். பேரவையானது அதன் தன்மதிப்படி, அவசியமெனக் கருதப்படக்கூடியவாறான எவரேனும் பரீட்சையாளரை, சமநிலைப்படுத்துநரை அல்லது மொழிப்பெயர்ப்பாளரைக் காலத்திற்குக்காலம் சேர்க்கவோ, நீக்கவோ அல்லது திரும்பப் பெறவோ செய்யலாம்.

**இணை உறுப்பாண்மைக்கான பரீட்சைகள் (ACMA)**

14. கீழே குறிப்பிடப்பட்டிருக்கும், எல்லாப் படிநிலைகளிலும் (மட்டங்கள்) தரப்பட்டுள்ள அந்தந்த வரிசையில் சித்தியெய்தியுள்ள மாணவர் ஒருவர் காலத்திற்குக்காலம் பேரவையினால் தீர்மானிக்கப்பட்டவாறான நிறுவகத்தின் இணை உறுப்புரிமையின் அளிப்பிற்குத் தகைமை உடையவராயித்தல் வேண்டும் :-

(அ) தொழில்நுட்ப படிநிலை/ஆரம்ப மட்டம் (மட்டம் 1) ;

(ஆ) இடை நிலைப்படிநிலை/செயற்பாட்டு மட்டம் (மட்டம் 2) ;

(இ) உயர் தொழில் சார் படிநிலை I/முகாமைத்துவ மட்டம் (மட்டம் 3) ;

(ஈ) உயர்தொழில் சார் படிநிலை II/ வல்லுநர் மட்டம் (மட்டம் 4) ; அத்துடன்

(உ) ஒருங்கிணைந்த விடயத்தில் கற்கை.

ஆயின், மேற்கூறப்பட்ட பரீட்சைகளின் ஒழுங்குமுறையைத் தவிர்த்து பரீட்சார்த்தி எவரும் பரீட்சைக்குத் தோற்றத் தகைமையுடைவராயிருத்தல் ஆகாது, பேரவையினால் விதிக்கப்பட்ட கட்டளைக் கற்களில் தரப்பட்டுள்ளவாறு ஒரே தடவையில் ஒன்றிற்கு மேற்பட்ட அத்தகைய பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்குப் பரீட்சார்த்தி எவரும் தகைமையுடையவராயிருத்தல் ஆகாது. ஆனால், மாணவர்கள் பரீட்சைகளில் தனித் தனிப் பாடத்திற்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

15. (1) தொழில்நுட்பக் படிநிலை (ஆரம்ப மட்டம்), இடை நிலைப்படிநிலை (செயற்பாட்டு மட்டம்), உயர் தொழில் சார் படிநிலை I (முகாமைத்துவ மட்டம்), உயர்தொழில் சார் படிநிலை II (வல்லுநர் மட்டம்) அல்லது ஒருங்கிணைந்த விடயக் கற்கைக்கு ஆள் ஒருவர் பின்வருமாறு இருந்தாலன்றி, அனுமதிக்கப்படமாட்டார் :-

(அ) நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட மாணவனாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) பரீட்சையின் திகதியிலிருந்து குறைந்தது 90 நாட்களுக்கு முன்னர் பிரதம நிறைவேற்று அலுவலருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவருக்கு பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறான படிவத்தில் பரீட்சைக்குத் தோற்றும் தனது விருப்பைச் சமர்ப்பித்திருத்தல் வேண்டும் ;

(இ) ஏற்புடையாயிருப்பின், நிறுவகத்திடமிருந்து அவர் எந்தப் பாடத்திலிருந்து அல்லது படிநிலையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளாரோ அந்தப் பாடத்தை அல்லது படிநிலையை உறுதிப்படுத்தும் கடிதத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஈ) காலத்திற்குக்காலம் பேரவையினால் தீர்மானிக்கப்பட வேண்டியவாறு பரீட்சையின் இயைபான படிநிலை தொடர்பான தோதான கட்டணத்தைச் செலுத்தியிருத்தல் வேண்டும் ;

(2) பேரவையினால் விதிக்கப்பட்ட கட்டளைக்கற்களின்படி முகாமைத்துவக் கணக்காளர் இணையுரிமை (AMA) தகைமையைப் பெற்றுள்ள மாணவர்கள் நிறுவகத்தின் உயர் தொழில்சார் படிநிலை I மற்றும் உயர் தொழில் சார் படிநிலை II பரீட்சைகளுக்கும் மற்றும் விடயக் கற்கைக்கும் தோற்றலாம். இந்தப் பரீட்சைகளைப் பூர்த்தி செய்த பின்னரும் மற்றும் பேரவையினால் வெளியிடப்பட்ட செயன்முறைப் பயிற்சி வழிகாட்டு நெறிகளில் காலத்திற்குக்காலம் குறிப்பிடப்பட்டவாறு செயன்முறைப் பயிற்சியைப் பூர்த்தி செய்த பின்னரும் மாணவர்கள் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு தகைமையுள்ளவர்களாயிருப்பார்கள்.

16. (1) உறுப்பாண்மைக்கு விண்ணப்பிப்பதற்கு இயைபான துறைகளில் மூன்று வருடங்களுக்கான செயல்முறைப் பயிற்சி பெறுவதற்கான கட்டளைக்கற்கள் காலத்திற்குக்காலம் பேரவையினால் தீர்மானிக்கப்பட்டவாறானதாகயிருத்தல் வேண்டுமென்பதுடன், அவை செயல்முறைப் பயிற்சி வழிகாட்டு நெறி ஒன்றில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(2) ஆளெவரும், அவர் பின்வருமாறு இருந்தாலன்றி, நிறுவகத்தின் உறுப்பினரொருவராகச் சேர்த்துக் கொள்ளப்படுதலாகாது:-

(அ) நிறுவகத்தின் உயர்தொழில் சார் படிநிலை II அல்லது வல்லுநர் மட்டம் 4 பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஆ) ஒரு வியாபாரச் சூழலில் அல்லது பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் துறையில் மூன்று வருட காலத்திற்குப் பேரவையினால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய விதத்தில் செயல்முறைப் பயிற்சியைப் பெற்றதற்கான சான்றைக் காண்பித்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் (நிர்வாகம்) ஒழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 18 இன் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுபவராக இருத்தல் வேண்டும்.

17. இந்த விதிகளில் சந்தர்ப்பம் வேறு விதத்தில் தேவைப்படுத்தினால் அன்றி –

“சட்டம்” என்பது, 2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகச் சட்டம் என்று பொருளாகும்.

“பேரவை” என்பது, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் பேரவை என்று பொருளாகும்.

“பிரதம நிறைவேற்று அலுவலர்” என்பது, சட்டத்தின் பிரிவு 15 (1) இன் கீழ் நியமிக்கப்பட்ட பிரதம நிறைவேற்று அலுவலர் என்று பொருளாகுமென்பதுடன், பிரதம நிறைவேற்று அலுவலராக அப்போதைக்கு முறைப்படி செயலாற்றுகின்ற வேறு எவரேனும் ஆளையும் உள்ளடக்கும் ;

“நிறுவகம்” என்பது 2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்தவக் கணக்காளர் நிறுவகச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட நிறுவகம் என்று பொருளாகும் ;

“மாணவர்கள்” என்பது 2013 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் சட்டம் தொடங்குவதற்கு முன்னர் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 123) கீழ்க் கூட்டிணைக்கப்பட்ட சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களும் மற்றும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் நிறுவகத்தில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களும் என்று பொருளாகும்.

*ச.வ.பீ. 01/2013*

**2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகச் சட்டம்**

*19 ஆம் பிரிவின் கீழான விதிகள்*

*2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க. சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் பேரவைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் பேரவையினால் ஆக்கப்பட்டவையும் கூட்டுறவுகள் மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவையுமான விதிகள்.*

தலைவர்,
சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக்
கணக்காளர் நிறுவகம்.

கொழும்பு,
*2014, மாச்சு 5.*

**விதிகள்**

*1.* இவ்விதிகள் 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவக (தேர்தல்கள்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட தலைவரையும், துணைத் தலைவரையும், பேரவையின் மூன்று உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தலானது, பேரவையினால் நிர்ணயிக்கப்பட்டவொரு நாளிலும், இடத்திலும் நேரத்திலும் நடைபெறவேண்டிய நிறுவகத்தின் உறுப்பினர்களினது கூட்டமொன்றில் இடம்பெறுதல் வேண்டும். அத்தகைய நாள், முதலாவது தேர்தலின் விடயத்தில் சட்டத்தில் 8 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட நான்காண்டுக் காலப்பகுதி முடிவுற்ற பின்னர் ஏழு நாட்களுக்கு மேற்பட்டதாகவிருத்தலாகாதென்பதுடன், அடுத்துப்பின்னரான தேர்தல்களின் விடயத்தில், பேரவையின் உறுப்பினர்களினது பதவிக்காலம் முடிவுற்றதன்பின்னர் ஏழு நாட்களுக்கு மேற்பட்டதாகவும் இருத்தலாகாது.

*3.* (1) உறுப்பினர்களின் கூட்டமொன்று கூட்டப்படவுள்ளபோது அத்தகைய கூட்டத்துக்குக் குறைந்தபட்சம் நான்கு வாரங்களுக்கு முன்னரேனும், பேரவையானது, நிறுவகத்தின் அறிவித்தற் பலகையில் கூட்டமொன்றைக் கூட்டுவதற்கான அறிவித்தலொன்றை வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

(2) அறிவித்தற் பலகையில் அத்தகைய அறிவித்தலை வெளிக்காட்டி வைத்தலானது, நிறுவகத்தின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் சொல்லப்பட்ட கூட்டம் பற்றிப் போதிய அறிவித்தலாகவிருத்தலும், மற்றும் எல்லா நோக்கங்களுக்காகவும் போதிய அறிவித்தலாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) பிரதான நிறைவேற்று அலுவலர், நிறுவகத்தின் எந்த உறுப்பினரின் முகவரி அவருக்கு முன்னர் அறிவிக்கப்பட்டுள்ளதோ அந்த ஒவ்வொர் உறுப்பினருக்கும் அத்தகைய அறிவித்தலின் பிரதியை அனுப்புதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், அதனை அனுப்பாது விட்டமை அல்லது அனுப்பத் தவறியமை, அல்லது அதனை உறுப்பினரொருவர் பெற்றுக்கொள்ளாமை, அத்தகைய அறிவித்தலை, கூட்டத்தை, தேர்தலை அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட எதனையும் அல்லது இவ்விதியின் கீழ் செய்யப்பட்டதாகக் கருதப்படுகின்ற எதனையும் செல்லுபடியற்றதாக்குதலோ அல்லது அதன் செல்லுபடியாந்தன்மையை வேறுவகையில் பாதித்தலோ ஆகாது.

*4.* அத்தகைய ஒவ்வொரு அறிவித்தலும் கூட்டத்தின் நேரத்தையும், திகதியையும், இடத்தையும், நோக்கத்தையும் குறித்துரைத்தல் வேண்டுமென்பதுடன், முறையே தலைவர், துணைத் தலைவர் என்ற பதவிகளுக்கும், பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் என்ற மூன்று பதவிகளுக்குமான பெயர் நியமனங்கள், கூட்டத்துக்கு முன்னர் குறைந்தபட்சம் பதினான்கு நாட்களுக்குக் குறையாமலிருக்க வேண்டியதும், அதன்கண் குறித்துரைக்கப்பட்டதுமானவொரு நாளன்று அல்லது அதற்கு முன்னர் பிரதான நிறைவேற்று அலுவலரினால் பெறப்படுதல் வேண்டுமெனக் கூறுதலும் வேண்டும். பேரவை உறுப்பினர்கள் என்ற பதவிக்கான பெயர் நியமனங்களைச் சமர்ப்பிக்கையில், தொழிலிலுள்ள உயர்தொழில்சார் கணக்காளர் ஒருவர் அல்லது தொழில்புரியும் உறுப்பினர் ஒருவர் என்ற முறையிலா அல்லது வேறெதேனும் முறையிலொ அவர் தேர்தலை நாடுகின்றாரென்பதை விண்ணப்பம் குறிப்பாகக் கூறுதல் வேண்டும். தொழிலிலுள்ள உயர்தொழில்சார் கணக்காளர்களினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் இரண்டு பேரவைப் பதவிகள் இருக்குமாதலால் இத்தேவைப்பாடு திருப்தி செய்யப்படுதல் வேண்டும்.

5. *(1)* ஆளெவரும் –

*(அ)* *அவர் நிறுவகத்தின் இணையுறுப்பினரொருவராக இருந்தாலொழியவும் ; அத்துடன்*

*(ஆ)* (i) *முதலாவது தேர்தலின் விடயத்தில், அவர், குறைந்தபட்சம் நான்காண்டுக் காலப்பகுதிக்கேனும் பேரவையின் உறுப்பினரொருவராகச் சேவையாற்றிருந்தாலொழியவும் ; அல்லது*

(ii) *அடுத்துப்பின்னரான தேர்தல்களின் விடயத்தில், அவர், அவற்றுள் இரண்டாண்டுகள் துணைத் தலைவர் என்ற பதவியிலிருந்திருக்க வேண்டிய, குறைந்தபட்சம் ஆறாண்டுக் காலப்பகுதிக்கேனும் பேரவையின் உறுப்பினர் ஒருவராகச் சேவையாற்றியிருந்தாலொழியவும் ;*

*பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவராதலாகாது.*

*(2)* ஆளெவரும் –

*(அ)* *அவர் நிறுவகத்தின் கூட்டு உறுப்பினரொருவராக இருந்தாலொழியவும் ; அத்துடன்*

*(ஆ)* *அவர் குறைந்தபட்சம் நான்காண்டுக் காலப்பகுதிக்கேனும் பேரவையின் உறுப்பினரொருவராகச் சேவையாற்றியிருந்தாலொழியவும் ;*

*பேரவையின் துணைத் தலைராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவராதலாகாது.*

*6. (1)* *பெயர் நியமனப்பத்திரம் ஒவ்வொன்றும் வேட்பாளரின் பெயரையும், நிறுவகத்தின் உறுப்பினர்களாகவிருக்க வேண்டிய முன்மொழிபவரினதும் வழிமொழிபவரினதும் பெயர்களையும் கையொப்பங்களையும் மற்றும் சம்பந்தப்பட்ட பதவிக்கு பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குத் தாம் சம்மதிக்கின்றாரென்ற பொருள்பட வேட்பாளரினால் கையொப்பமிடப்பட்டவொரு கூற்றையும், கொண்டிருத்தல் வேண்டும்.*

*ஆயின், எவ்வாறாயினும், உறுப்பினரெவரும் ஒரு வேட்பாளருக்கு மேற்பட்டோரை முன்மொழிவதற்கு அல்லது வழிமொழிவதற்கு உரித்துடையவரல்லர்.*

*(2)* *ஏதேனும் பதவிக்கான பெயர் நியமனங்கள், நிறுவகத்தினால் வழங்கப்பட்டவையும், பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் இருக்கவேண்டியவையுமான படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான பெயர் நியமனங்களைச் சமர்ப்பிக்கின்ற உறுப்பினர்கள், பின்வருவனவற்றைக் கொண்டுள்ளதான பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளின் சுருக்கமான விபரமொன்றை அனுப்பிவைப்பதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றனர் :–*

*(அ)* *உறுப்பாண்மைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆண்டும் உறுப்பாண்மையின் வகுதியும் ;*

*(ஆ)* *கல்விசார் மற்றும் உயர்தொழில்சார் தகைமைகள் ;*

(இ) *முகாமைத்துவக் கணக்கியல் துறையிலும் மற்றும் வேறு கற்கை நெறிகளிலுமான விசேட எய்துகைகள் ;*

*(ஈ)* *சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்துக்கான சேவை ;*

*(உ)* *தற்போதைய மற்றும் கடந்தகாலத் தொழில்பற்றிய விபரங்கள்.*

*(3)* *பெயர்நியமனப் பத்திரமொன்று, நிறுவகத்தின் ஒரு பதவிக்கு மேற்பட்டவற்றுக்கான அல்லது ஓர் உறுப்பினருக்கு மேற்பட்டோருக்கான பெயர் நியமனங்களைக் கொண்டிருத்தலாகாது. ஆனால் உறுப்பினரொருவர், வெவ்வேறு முன்மொழிபவரினாலும் வழிமொழிபவரினாலும் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்குப் பெயர்குறித்து நியமிக்கப்படலாம் :–*

*ஆயின், எவ்வாறாயினும், தலைவர் என்ற பதவிக்கான ஆளொருவரின் பெயர்நியமனம், அத்தகைய ஆள் அத்தகைய பெயர்நியமனப்பத்திரத்தின் மீது அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கான தமது விருப்பமின்மையை வெளிப்படையாக வெளிப்படுத்தினாலொழிய, துணைத் தலைவர் என்ற பதவிக்கும் பேரவையின் உறுப்பினரென்று பதவிக்கும் அத்தகைய ஆளின் பெயர் நியமனமாக, அது காரணமாகவே தொழிற்படுதலும் மற்றும் எல்லா நோக்கங்களுக்குமாக அவ்வாறு கருதப்படுதலும் வேண்டும் :*

*ஆயின், மேலும், துணைத் தலைவர் என்ற பதவிக்கான ஆளொருவரின் பெயர் நியமனம், அத்தகைய ஆள் அத்தகைய பெயர் நியமனப்பத்திரத்தின் மீது அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கான தமது விருப்பமின்மையை வெளிப்படையாக வெளிப்படுத்தினாலொழிய, பேரவையின் உறுப்பினரென்ற பதவிக்கு அத்தகைய ஆளின் பெயர்நியமனமாக அது காரணமாகவே தொழிற்படுத்தும் மற்றும் எல்லா நோக்கங்களுக்குமாக அவ்வாறு, கருதப்படுதலும் வேண்டும்.*

(4) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள், வாக்குகளைப் பரிந்து கேட்டு மின்னஞ்சல்களை அல்லது கடிதங்களை அனுப்புதல் மூலம் அல்லது வாய்மொழி மூலம் எவையேனும் பரிந்து வேண்டல் செயற்பாடுகளைத் தவிர்த்தல் வேண்டும்.

(5) பிரதான நிறைவேற்று அலுவலர், பேரவையின் கலந்தாலோசனையுடன், இவ்விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக உரியமுறையில் கொடுக்கப்படாத, அல்லது கொடுக்கப்பட்டிராத ஏதேனும் பெயர்நியமனப் பத்திரத்தை நிராகரித்தல் வேண்டும். அவர் பேரவையின் கலந்தாலோசனையுடன், தேர்தல்களுக்கு அவசியமான வாக்குச்சீட்டுக்களையும் வாக்குச்சீட்டுப் பெட்டிகளையும் தயாரித்தலும் அல்லது தயாரிக்கப்படச் செய்வித்தலும் வேண்டும்.

(6) ஏதேனும் தேர்தலில் வாக்களித்தலானது, கையியக்கத்தின் மூலம் அல்லது இலத்திரனிய ரீதியில் நடாத்தப்படுதல் வேண்டும். இலத்திரனியல் முறையிலான வாக்களித்தலுக்கான நடவடிக்கை முறை 15 ஆம் விதியின் நியதிகளின்படி இருத்தல் வேண்டும். ஆயின், இருமுறைகளுள் ஒன்றின் மூலம் ஏதேனும் தேர்தல் நடாத்தப்பட்டுள்ளமையானது, அத்தகைய தேர்தலைச் செல்லுபடியற்றதாக்குதலோ அல்லது அதன் செல்லுபடியாந்தன்மையைப் பாதித்தலோ ஆகாது.

7. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரைப் புகுமுகம் செய்தல், தேர்தல் நடைபெற்ற நேரத்திலிருந்து மூன்று வாரங்களினுள், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவையினால் தீர்மானிக்கப்படவேண்டியவொரு திகதியிலும்,நேரத்திலும், இடத்திலும் இடம்பெறுதல் வேண்டும்.

8. (1) பெயர்நியமனப் பத்திரங்களைப் பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நாளுக்குப் பின்னர் இரண்டு நாட்களுக்கு மேற்படாமல் பிரதான நிறைவேற்று அலுவலர், முறையே தலைவர், துணைத் தலைவர், பேரவை உறுப்பினர் என்ற பதவிகளுக்கு உரியமுறையில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களை அகரவரிசை ஒழுங்கின்படி கொண்டுள்ள மூன்று நிரல்களை அறிவித்தற் பலகையில் வெளிக்காட்டிவைத்தல் வேண்டும். துணைத் தலைவர் என்ற பதவிக்குப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களின் நிரலில், தலைவர் என்ற பதவிக்கு உரியமுறையில் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்கள், அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குத் தமது விருப்பமின்னையை வெளிப்படையாக வெளிப்படுத்தியுள்ளவர்களின் பெயர்கள் தவிர, சேர்க்கப்படுதல் வேண்டும். பேரவை உறுப்பினர்கள் என்ற பதவிகளுக்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களின் நிரலில், தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவிகளுக்கு உரியமுறையில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்கள், அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குத் தமது விருப்பமின்மையை வெளிப்படையாக வெளிப்படுத்தியுள்ளவர்களின் பெயர்கள் தவிர, சேர்க்கப்படுதல் வேண்டும்.

(2) அறிவித்தற் பலகையில் மேலேயுள்ள மூன்று நிரல்களையும் வெளிக்காட்டிவைத்தலானது, நிறுவகத்தின் ஒவவோர் உறுப்பினருக்கும் பெயர் நியமனங்கள் பற்றிய போதிய அறிவித்தலாகவிருத்தலும் மற்றும் எல்லா நோக்கங்களுக்காகவும் போதிய அறிவித்தலாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) நிறுவகத்தின் எந்த உறுப்பினரின் முகவரி பிரதான நிறைவேற்று அலுவலருக்கு முன்னர் அறிவிக்கப்பட்டுள்ளதோ அந்த உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அத்தகைய மூன்று நிரல்கள் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை அவர் அனுப்பலாம்.

ஆயின், எவ்வாறாயினும், அதனை அனுப்பாது விட்டமை அல்லது அனுப்பத் தவறியமை, அல்லது அதனை உறுப்பினரொருவர் பெற்றுக்கொள்ளாமை, அத்தகைய பெயர்குறித்த நியமனங்களை, நிரல்களை, கூட்டத்தை, தேர்தலை அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட எதனையும் அல்லது இவ்விதிகளின் கீழ் செய்யப்படுவதாகக் கொள்ளப்படுகின்ற எதனையும் செல்லுபடியற்றதாக்குதலோ அல்லது வேறுவகையில் பாதித்தலோ ஆகாது.

(4) பிரதான நிறைவேற்று அலுவலர், எந்த ஆட்கள் தொடர்பில் பெயர் நியமனப் பத்திரங்கள் பெறப்பட்டு 6 ஆம் விதியின் (5) ஆம் பந்தியின் கீழ் நிராகரிக்கப்பட்டனவோ அந்த ஆட்கள் எவரேனுமிருப்பின், அவர்கள் பற்றிய நிரலொன்றை, அத்தகைய நிராகரிப்புக்கான காரணங்களுடன் அறிவித்தற் பலகையில் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

9. ஏதேனும் பதவிக்கு அல்லது எவையேனும் பதவிகளுக்கு உரியமுறையில் செய்யப்பட்ட பெயர்நியமனங்களின் எண்ணிகை வெற்றிடங்களின் எண்ணிக்கையை விஞ்சினால், பேரவையானது, பெயர்நியமனப் பத்திரங்களைப் பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நாளுக்குப் பின்வரும் கூட்டத்துக்கு முன்னர் ஏழு நாட்களுக்குக் குறையாமலும், தேர்தலுக்கான நடுவர்களாவிருப்பதற்கென, ஏதேனும் பதவிக்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளவர்களாகவிராத நிறுவகத்தின் அல்லது பேரவையின் உறுப்பினர்களிடையேயிருந்து மூன்று ஆட்களை நியமித்தல் வேண்டும்.

10. வெளிச்செல்லும் தலைவர், அல்லது அவர் வருகை தராதிருப்பின் அல்லது விரும்பாவிடின் வெளிச் செல்லும் துணைத் தலைவர், அல்லது அவர் வருகைதராதிருப்பின் அல்லது விரும்பாவிடின், கூடுமிடத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் நியமிக்கப்பட்ட வேறெவரேனுமாள் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும். எவ்வாறாயினும், வெளிச் செல்லும் நேரடிக் கடந்தகாலத் தலைவர், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவைக்கான மதியுரைநராகப் பணியாற்றுதல் வேண்டும்.

11. (1) எவரேனும் வேட்பாளர், தாமதமின்றி, கூட்டம் தொடங்குகையில், ஏதேனும் பதவிக்கான தேர்தலிலிருந்து தாம் விலகுவதனை வாய்மொழி மூலம் அறிவிக்கலாம். ஏதேனும் பதவிக்கான தேர்தலிலிருந்து வேட்பாளரொருவர் விலகுதலானது, அவர் வேறெந்தப் பதவிக்கு உரியமுறையில் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளரோ அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்டவராகக் கருதப்படுகின்றாரோ அந்த வேறேதேனும் பதவிக்கான தேர்தலிலிருந்தான விலகுதலாகவிருத்தலோ அல்லது விலகுதலாகவிருப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது.

(2) தலைவர் என்ற பதவிக்கு உரியமுறையில் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ள ஓராள் மட்டுமே எஞ்சியிருப்பின், அத்தகைய ஆள் அதன்மேல், உரியமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராகக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் ஆளினால் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) தலைவர் என்ற பதவிக்கு உரியமுறையில் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ள ஓராள் மட்டுமே எஞ்சியிருப்பின் (மற்றும் ஒன்றில் தலைவர் என்ற பதவிக்கு ஓராள் மட்டுமே உரிய முறையில் பெயர்குறித்து நியமிக்கப்பட்டிருப்பின் அல்லது தலைவர் பதவிக்கு உரியமுறையில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எல்லா ஆட்களும் துணைத் தலைவர் என்ற பதவிக்குப் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு அவர்களின் விருப்பமின்மையை வெளிப்படையாக வெளிப்படுத்தியிருப்பின்) அத்தகைய ஆள் அதன்மேல், உரியமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட துணைத் தலைவராகக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் ஆளினால் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) பேரவையின் உறுப்பினர்கள் என்ற பதவிகளுக்கு உரிய முறையில் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ள மூன்றுக்கு மேற்படாத ஆட்கள் எஞ்சியிருப்பின் (மற்றும் ஒன்றில், ஓராள் மட்டுமே தலைவர் அத்துடன் துணைத் தலைவர் பதவிகளுள் ஒவ்வொன்றுக்கும் உரிய முறையில் பெயர்குறித்து நியமிக்கப்பட்டிருப்பின் அல்லது தலைவர் மற்றும் துணைத் தலைவர் என்ற பதவிகளுக்கு உரியமுறையில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எல்லா ஆட்களும், பேரவையின் உறுப்பிரென்ற பதவிக்குப் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குத் தமது விருப்பமின்மையை வெளிப்படையாக வெளிப்படுத்தியிருப்பின்) அத்தகைய எல்லா ஆட்களும் அதன்மேல், பேரவையின் உரிய முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாகக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் ஆளினால் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

12. (1) எந்தப் பதவிகள் தொடர்பில் ஆட்கள் எவரும் உரியமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக 11 ஆம் விதியின் கீழ் வெளிப்படுத்தப்படவில்லையோ அப்பதவிகள் தொடர்பிலான தேர்தல் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாக அல்லது இலத்திரனியல் வாக்களித்தல் மூலமாக இருத்தல் வேண்டும் என்பதுடன், கூட்டத்தில் சமூகமளிக்கும் நிறுவகத்தின் ஒவவோர் உறுப்பினரும் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலும் வேண்டும். இந்நோக்கத்துக்காக வாக்குச்சீட்டுகளை வழங்குதல், கூட்டம் தொடங்கிய பின்னர் முதல் இரண்டு மணித்தியாலங்களின் போது இடம்பெறுதல் வேண்டுமென்பதுடன், வாக்களித்தலானது, கூட்டம் தொடங்கிய பின்னர் முதல் இரண்டரை மணித்தியாலயங்களின் போது அல்லது பேரவையினால் காலத்துக்குக்காலம் முடிபு செய்யப்படக்கூடியவாறாக இடம்பெறுதலும் வேண்டும்.

(2) விதி 8 இல் குறிப்பீடு செய்யப்பட்ட மூன்று நிரல்களிலும் காணப்படுகின்றவாறாகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களைக் கொண்டுள்ள, முறையே தலைவர், துணைத் தலைவர் மற்றும் பேரவை உறுப்பினர் என்ற பதவிகளுக்கு, மூன்று வித்தியாசமான நிறங்களில் மூன்று தொகுதியினவான வாக்குச்சீட்டுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு வாக்குச்சீட்டும் ஒவ்வொரு வேட்பாளரினதும் பெயர்க்கெதிரான கூடொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அதில், வாக்களரின் வாக்கு கட்டிக்காட்டப்படலாம்.

(3) முறையே "தலைவர்", "துணைத்தலைவர்" மற்றும் "பேரவை உறுப்பினர்" எனச் சுட்டுத்துண்டிடப்பட்ட மூன்று வாக்குச் சீட்டுப் பெட்டிகள் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் ; தோதான வாக்குச் சீட்டுப் பெட்டியினுள் மட்டுமே வாக்குகள் அளிக்கப்படுதல் வேண்டும்.

(4) தலைவர் என்ற பதவிக்கான தேர்தலின் விடயத்தில், வாக்காளரொருவர் எந்த வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவதை விரும்புகின்றாரோ அந்த வேட்பாளரின் பெயருக்கெதிரான கூட்டில் "1" என்ற எண்ணை எழுதுவதன் மூலம் தமது வாக்கைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

(5) துணைத் தலைவர் என்ற பதவிக்கான தேர்தலின் விடயத்தில், வாக்காளரொருவர் எந்த வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவதை விரும்புகின்றாரோ அந்த வேட்பாளரின் பெயருக்கெதிரான கூட்டில் "1" என்ற எண்ணை எழுதுவதன் மூலம் தமது வாக்கைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும். வாக்காளரொருவர் முன்னைய வேட்பாளர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவிடத்து, எவர் தேர்ந்தெடுக்கப்படுவதை விரும்புகின்றாரோ அந்த வேட்பாளரின் பெயருக்கெதிரான கூட்டில் "2" என்ற எண்ணையும் எழுதலாம் முனைய வேட்பாளர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் மட்டுமே அத்தகையவோரு வாக்கு எண்ணப்படுதல் வேண்டும். வேறுவகையாகவல்ல.

(6) பேரவை உறுப்பினர் என்ற மூன்று பதவிகளுக்குமான தேர்தலின் வியடத்தில், வாக்காளரொருவர், அவர் எந்த வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதை விரும்புகின்றாரோ அந்த வேட்பாளர்களின் பெயர்களுக்கெதிரான கூடுகளில் முந்துரிமை ஒழுங்கு வரிசைப்படி "1", "2", "3", "4", "5", "6" மற்றும் அதேபோன்று எண்களை எழுதுவதன் மூலம் தமது வாக்குகளைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும். அத்தகைய வாக்குகள் விதி 13 (4) இல் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் எண்ணப்படுதல் வேண்டும்.

13. (1) வாக்குச் சீட்டுப் பெட்டிகளைத் திறத்தல், வாக்குகளை எண்ணுதல், பழுதடைந்த வாக்குச் சீட்டுக்களை நிராகரித்தல், தேர்ந்தேடுக்கப்பட்ட ஆட்களைத் தீர்மானித்தல் மற்றும் இதன்கண் ஏற்பாடு செய்யப்படாததும், தேர்தல்களை நடாத்துதல் தொடர்பானதுமான வேறேதேனும் கருமம் என்பன, 9 ஆம் விதியின் கீழ் நியமிக்கப்பட்ட மூன்று நடுவர்களினால் அல்லது அவர்களினால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட முறையில் அல்லது அவர்கள் உடன்பட்டுக்கொள்ள இயலாதவர்களாகவிருப்பின் அவர்களுள் பெரும்பான்மையோரினால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட முறையில் செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயிலும், வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்களைத் தீர்மானித்தல், நடுவர்களினால், இழுக்கப்பட்ட திருவுளச் சீட்டுகளின் மூலமாதல் வேண்டும்.

9 ஆம் விதியின் கீழ் நியமிக்கப்பட்ட நடுவர்களுள் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் வருகைதராதிருப்பின், ஏதேனும் பதவிக்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டிராத விடயத்துக்கேற்ப, எவரேனுமாள் அல்லது ஆட்கள், வருகைதராதுள்ள நடுவரின் அல்லது நடுவர்களின் இடத்தில், கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களினால் நியமிக்கப்படலாம்.

(2) தலைவர் என்ற பதவிக்கு வாக்குகளை அளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட வாக்குச் சீட்டுபெட்டி முதலில் திறக்கப்பட்டு, வாக்குகள் எண்ணப்பட்டு, ஆகக்கூடிய எண்ணிக்கையினவான செல்லுபடியான வாக்குகளைப் பெறுகின்ற வேட்பாளர், உரியமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரென (நடுவர்களினால் அவ்வாறு அறிவிக்கப்பட்டதன் மேல்) தவிசாளரினால் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) துணைத் தலைவர் என்ற பதவிக்கு வாக்குகளை அளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட வாக்குச் சீட்டுப் பெட்டி பின்னர் திறக்கப்பட்டு வாக்குகள் எண்ணப்படுதல் வேண்டும். ஏதேனும் வாக்குச்சீட்டில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அளுக்கு வாக்கொன்று அளிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய வாக்கு கணக்கெடுக்கப்படுதலாகாதென்பதுடன், "2" என்ற எண்ணினை எழுதுவதன் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட வாக்கு ஏதேனுமிருப்பின், அது எண்ணப்படுதலும் வேண்டும். ஆகக்கூடிய எண்ணிக்கையினவான செல்லுபடியான வாக்குகளைப் பெறுகின்ற வேட்பாளர், உரியமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட துணைத் தலைவரென (நடுவர்களினால் அவ்வாறு அறிவிக்கப்பட்டதன் மேல்) தவிசாளரினால் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) பேரவை உறுப்பினர் என்ற பதவிகளுக்கு வாக்குகளை அளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட வாக்குச் சீட்டுப்பெட்டி பின்னர் திறக்கப்பட்டு வாக்குகள் எண்ணப்படுதல் வேண்டும். ஏதேனும் வாக்குச் சீட்டில் தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்களுக்கு வாக்கொன்று அல்லது வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய வாக்கு அல்லது வாக்குகள் நிராகரிக்கப்பட்டு எண்ணப்படுதலாகாது. எஞ்சியுள்ள வாக்குகளுள் முதல் மூன்று மட்டுமே எண்ணப்படுதல் வேண்டும். ஆகக்கூடிய எண்ணிக்கையினவான செல்லுபடியான வாக்குகளைப் பெறுகின்ற மூன்று வேட்பாளர்களும், உரியமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவையின் உறுப்பினர்களென (நடுவர்களினால் அவ்வாறு அறிவிக்கப்படுவதன் மேல்) தவிசாளரினால் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(5) தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், துணைத் தலைவர் என்ற பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒரு வேட்பாளர் மட்டுமே எஞ்சியுள்ளாரென வெளிப்படையாகக் காணப்படின், துணைத் தலைவர் என்ற பதவிக்கு அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணுவதற்கு முற்படுதல் நடுவர்களுக்கு அவசியமாதலாகாது. துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் பேரவையின் உறுப்பினர் என்ற பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மூன்று அல்லது அதற்குக் குறைவான வேட்பாளர்கள் மட்டுமே உள்ளனரென வெளிப்படையாகக் காணப்படுமிடத்து பேரவையின் உறுப்பினர் என்ற பதவிகளுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணுவதற்கு முற்படுதல் நடுவர்களுக்கு அவசியமாதலாகாது. அத்தகைய வேட்பாளர், அல்லது அத்தகைய வேட்பாளர்கள் உரியமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையே துணைத் தலைவரென அல்லது பேரவை உறுப்பினர்களென (நடுவர்களினால் அவ்வாறு அறிவிக்கப்பட்டதன் மேல் தவிசாளரினால் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(6) தேர்தல் முடிவுற்றபின்னர், எவையேனும் பதவிகள் வெற்றிடமாகத் தொடர்ந்திருந்தால், கூட்டத்திற்கு தலைமைதாங்கும் ஆள் பெயர் நியமனங்களை உடனடியாகக் கோருதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட பதவிகள் கூட்டத்தில் கைகளை உயர்த்திக்காட்டுவதன் மூலமான தேர்தலின் மூலம் நிரப்படுதலும் வேண்டும்.

(7) ஆளெவரும் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்குத் தேரந்தெடுக்கப்படுதலாகாது.

14. (1) தலைவர், துணைத்தலைவர் அல்லது பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறக்கும் அல்லது பதவியை வறிதாக்கும் பட்சத்தில் பேரவையினாது, அதன் தற்றுணியின்படி, பேரவையினால் நிர்ணயிக்கப்படவேண்டிய ஒரு நாளன்றும், நேரத்திலும், இடத்திலும் நிறுவக உறுப்பினர்களின் கூட்டமொன்றில் தேர்தலொன்றை நடாத்தலாம். அத்தகைய நாள், அத்தகைய தேர்தலுக்கான அவசியத்தைப் பேரவை அறிந்தபின்னர் நான்கு வாரங்களுக்கு மேற்படாததாகவிருத்தல் வேண்டும்.

(2) பேரவையானது, அத்தகைய கூட்டத்தைக் கூட்டுகின்ற அறிவித்தலொன்றை, அத்தகைய கூட்டத்துக்குக் குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு முன்னரெனும், அக்கூட்டத்தின் நேரம், திகதி, இடம் மற்றும் நோக்கம் என்பவற்றைக் குறித்துரைத்து அறிவித்தற் பலகையில் வெளிக்காட்டிவைக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) அறிவித்தற் பலகையில் அத்தகைய அறிவித்தலை வெளிக்காட்டி வைத்தலானது, நிறுவனத்தின் ஒவ்வொர் உறுப்பினருக்கும் எல்லா நோக்கங்களுக்குமாக சொல்லப்பட்ட கூட்டம் பற்றிய போதிய அறிவித்தலாக இருத்தலும் மற்றும் இருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) பிரதான நிறைவேற்று அலுவலர், நிறுவகத்தின் எந்த உறுப்பினரின் முகவரி அவருக்கு முன்னர் அறிவிக்கப்பட்டுள்ளதோ அந்த உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் சொல்லப்பட்ட அறிவித்தலின் பிரதியொன்றை அனுப்புதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் அதனை அனுப்பாதுவிட்டமை அல்லது அனுப்பத் தவறியமை, அல்லது அது உறுப்பினரொருவரினால் பெற்றுக் கொள்ளப்படாமை சொல்லப்பட்ட அறிவித்தலை, கூட்டத்தை, தேர்தலை அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட எதனையும் அல்லது இவ்விதிகளின் கீழ் செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட எதனையும் செல்லுபடியற்றதாக்குதலோ அல்லது அதன் செல்லுபடியாந்தன்மையை வேறு வகையில் பாதித்தலோ ஆகாது.

(5) தலைவர், அல்லது அவர் வருகைதராவிடின் அல்லது விரும்பாவிடின் துணைத்தலைவர், அல்லது அவர் வருகைதராவிடின் அல்லது விரும்பாவிடின் கூட்டத்தில் சமூகமளித்துள்ள உறுப்பினர்களினால் நியமிக்கப்பட்ட வேறெவரேனுமாள் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(6) கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் ஆள், நிரப்பப்படவேண்டிய பதவிகளுள் ஒவ்வொன்றுக்கும் பெயர் நியமனங்களைக் கூட்டத்தில் கோருதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட பதவிகள் கைகளை உயர்த்திக் கூட்டுவதன் மூலமான தேர்தலின் மூலம் நிரப்பப்படுதலும் வேண்டும்.

(7) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆள் அப்போது சம்மதித்தாலொழிய, அல்லது அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு எழுத்தில் முன்னர் சம்மதித்திருந்தாலொழிய, பெயர் நியமனங்கள் எவையும் செல்லுபடியானவையாதலாகாது.

(8) கூட்டத்திற்குத் தலைமைாங்குகின்ற ஆள், அத்தகைய கூட்டத்தில் எழக்கூடியதும், இவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்படாததுமான தகவுடைமை பற்றிய அல்லது நடவடிக்கைமுறை பற்றிய ஒவ்வொரு பிரச்சினையையும் முடிபுசெய்தல் வேண்டும். அத்தகைய முடிபு இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

13. (1) இலத்திரனியல் முறை வாக்களித்தலின் விடயத்தில், பின்வரும் நடவடிக்கைமுறை கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) இலத்திரனியல் முறையில் வாக்குகளை அளிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற இலத்திரனியல் வாக்களித்தல் முறைமையில் வேட்பாளர்களின் நிரல் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய முறைமையில் தமது தெரிவைப் பதிவதன் மூலம் வாக்களர் தமது முந்துரிமையையும் தெரிவு செய்யலாம் ;

(ஆ) வாக்காளர் எட்டுப் பதிவுக் கருமபீடங்களில் அல்லது ஏதேனும் தேர்தலில் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய வேறு எண்ணிக்கையினவான கருமபீடங்களில் பதிவு செய்யப்படுதல் வேண்டும், வாக்காளர்களின் பதிவு, கையியக்கத்தின் மூலம் அல்லது இலத்திரனியல் முறையில் தொழிற்படுத்துநர்களினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும் ;

(இ) வாக்காளரொருவர் உரியமுறையில் பதிவு செய்யப்பட்ட பின்னர் பதிவுக் கருமபீத்திலுள்ள தொழிற்படுத்துநர் கிடைக்கக்கூடியதாகவுள்ள வாக்களித்தல் நிலையத்துக்கு வாக்காளரை நெறிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வாக்காளர் தமது வாக்கையும் அளிக்கலாம் ;

(ஈ) வாக்களித்தலானது, ஒவ்வொரு வாக்களிக்கும் நிலையத்திலுமுள்ள இலத்திரனியல் வாக்களிதல் முறைமையின் மூலமானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், வேட்பாளரின் பெயர்கள் போன்ற தகவலை வெளிக்காட்டி வைப்பதற்கும் மற்றும் தொடுகைத் திரைப் பொறிமுறை மூலம் அல்லது ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வேறு முறை மூலம் தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளரை வாக்காளர்கள் சுட்டிக்காட்டுவதனை வசதிப்படுத்துவதற்கும் என வடிவமைக்கப்படுதலும் வேண்டும். தலைவர், துணைத்தலைவர் மற்றும் பேரவை உறுப்பினர்கள் என்ற பதவிக்கான வாக்களித்தல் நடவடிக்கைமுறை அதேபோன்றதாதல் வேண்டும் ;

(உ) தேவைப்படின், தலைவர், துணைத்தலைவர் மற்றும் பேரவை உறுப்பினர் என்போருக்கு வாக்களித்தலானது அச்சுப்பிரதி என்ற வகையில் பதியப்படுமென்பதுடன், கணக்காய்வுத் தேர்வாய்வுக்கான பதிவேடொன்றாக வைத்திருக்கப்படுதலும் வேண்டும் .

(2) எந்தத் தேர்தலில் இலத்திரனியல் வாக்களித்தல் மூலம் அல்லது இலத்திரனியல் மற்றும் கையியக்க வாக்களித்தல் மூலம் வாக்குகள் அளிக்கப்படுகின்றனவோ அந்தத் தேர்தலில் இலத்திரனியல் வாக்களித்தல் நடைமுறையின் போது ஏதேனும் முறைமைப்பழுதடைவு, தாமதம் அல்லது முறிவு ஏற்படின் வழங்கப்படும் வாக்குச்சீட்டுகைளப் பயன்படுத்துவதற்கு வாக்காளர்கள் அனுமதிக்கப்படுதல் வேண்டும் வாக்களித்தலுக்கு குறித்தொதுக்கப்பட்ட காலப்பகுதி முடிவுற்றபோது, இலத்திரனியல் வாக்களித்தல் முறைமையின் தொழிற்படுத்துநரினால் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் கையொப்பமிடப்பட்ட அச்சிடப்பட்ட பெறுபேற்றுத்தாள் என்ற வடிவத்தில் நடுவருக்குப் பெறுபேறுகள் கொடுக்கப்படுதல் வேண்டும். நடுவர் இரண்டு மணித்தியாலயங்களுள் பெறுபேறுகளை அறிவித்தல் வேண்டும்.

(3) வாக்களித்தல் நடைமுறையானது, இலத்திரனியல் முறை வாக்களித்தலிலிருந்து வாக்குச் சீட்டுகளைப் பயன்படுத்தி கையியக்கத்தின் மூலமான வாக்களித்தலுக்குப் பின்வருமாறு மாற்றப்படவேண்டுமாவென்பதை நடுவர் முடிவு செய்யலாம்.

(அ) பதிவுக் கருமபீடங்களிலுள்ள பணியாட்டொகுதியினர், இலத்திரனியல் முறையில் வாக்களித்திராத எஞ்சியுள்ள உறுப்பினர்களுக்கு, தலைவர், துணைத்தலைவர் மற்றும் பேரவை உறுப்பினர் எனபோரைத் தேர்ந்தெடுப்பதற்கான அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டுகளை வழங்குதல் வேண்டும் ;

(ஆ) முந்துரிமையளிக்கவுள்ள வேட்பாளரின் பெயருக்கு முன்னால் தமது முந்துரிமையை இடுவதன் மூலம் வாக்களித்தல் வேண்டுமென்பதுடன், இந்நோக்கத்துக்காக இடப்பட்ட வாக்குச்சீட்டுப் பெட்டியினுள் வாக்குச்சீட்டைப் போடுதலும் வேண்டும் ;

(இ) கையியக்கத்தினாலான வாக்களித்தல் நடைமுறை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், வாக்குச் சீட்டுகளும் வாக்களித்தல் நடைமுறையின்போது இலத்திரனியல் முறையில் தோற்றுவிக்கப்பட்ட அச்சுப்பிரதியும், கையியக்கத்தின் மூலம் எண்ணப்படுதல் வேண்டுமென்பதுடன், பெறுபேறுகள் நடுவரினால் அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

16. இவ்விதிகளின் ஏற்பாடுகளில் விதிக்கப்பட்ட நெறிகளுக்கிணங்கத் தேர்தல் நடாத்தப்பட்டதென்றும், இவ்விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறியமை தேர்தலின் பெறுபேற்றைப் பாதிக்கவில்லையென்றும் தோன்றினால், இவ்விதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகத் தவறியமை எதுவும் காரணமாகத் தேர்தலெதுவும் செல்லுபடியற்றதாதலாகாது.

17. இவ்விதிகளில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய :-

"சட்டம்" என்பது, 2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கண்காளர் நிறுவகச் சட்டம் என்று பொருளாகும் ;

"கணக்காய்வுத் தேர்வாய்வு" என்பது, ஏதேனும் தேர்தலில் இரத்திரனியல் முறையில் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையினது கையியக்கத்தின் மூலமானவொரு கணக்காய்வு என்றும், ஒவ்வொரு போட்டியிடுநருக்கும் வாக்காளர்களினால் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையைச் சுட்டிக்காட்டக்கூடியதும், வாக்களித்தல் நடைமுறையின் போது தோற்றுவிக்கப்பட்டதுமான ஏதேனும் அச்சுப்பிரதி என்றும் பொருளாகும் ;

"பிரதான நிறைவேற்று அலுவலர்" என்பது, சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பிரதான நிறைவேற்று அலுவலர் என்று பொருளாகும் என்பதுடன், பிரதான நிறைவேற்று அலுவலராக அப்போதைக்கு உரியமுறையில் செயலாற்றுகின்ற வேறெவரேனுமாளையும் உள்ளடக்கும் ;

"பேரவை" என்பது, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் பேரவை என்று பொருளாகும் ;

"இலத்திரனியல் வாக்களித்தல் முறைமை" என்பது, தன்னியக்கப்பட்டியல்படுத்தற் சாதனத்தை அல்லது தரவு செய்முறைப்படுத்தற் சாதனத்தைப் பயன்படுத்தி, வாக்குகளை அளிக்கும் மற்றும் வாக்குச்சீட்டுகளைப் பட்டியல்படுத்தும் முறைமையொன்று என்று பொருளாகும் ;

"நிறுவகம்" என்பது சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம் என்று பொருளாகும் ;

"உறுப்பினர்" என்பது, நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள ஆளொருவர் என்றும், எவ்வாளின் உறுப்பாண்மை, காலங்கழிவதன் மூலமாகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி காலங்கடந்ததாகவிராதுள்ளதோ அல்லது இடைநிறுத்தப்பட்டதாகவிராதுள்ளதோ அல்லது முடிவுறுத்தப்பட்டதாகவிராதுள்ளதோ அந்த ஆளொருவர் என்றும் பொருளாகும் ;

"அறிவித்தற் பலகை" என்பது, நிறுவகத்தினதும் பேரவையினதும் அலுவலக முறையான அறிவித்தல்களும் கடிதத் தொடர்புகளும் நிறுவகத்தின் பிரதான அலுவலகத்திலுள்ள எந்த அறிவித்தற் பலகையில் வழமையாக வெளிக்காட்டி வைக்கப்படுகின்றனவோ அந்த அறிவித்தற் பலகை என்று பொருளாகும் ;

"பதிவு நிலையம்" என்பது, தேர்தலொன்றின் போது வாக்காளர்கள் பதிவு செய்யப்படுகின்ற இடமொன்றாகப் பேரவையினால் அடையாளங்காணப்பட்ட ஏதேனும் நிலையம் என்று பொருளாகும் ;

"வாக்களிக்கும் நிலையம்" என்பது, வாக்களிப்பதற்குத் தொடுகைத் திரையொன்றை அல்லது பேரவையினால் முடிவு செய்யப்படவேண்டிய வேறேதேனும் இலத்திரனியல் ஊடகத்தைப் பயன்படுத்தி, இலத்திரனியல் முறையில் ஒவ்வொரு பதிவு நிலையத்திலும் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் இலத்திரனியல் வசதி என்று பொருளாகும்.

**அட்டவணை**

சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கண்காளர் நிறுவகம்

பெயர் நியமனப் பத்திரம்

| | |
|---|---|
| பதவி வேட்பாளர் | : ............................................................................................................ 1 |
| வேட்பாளரின் பெயர் | :.......................................................................................................... |
| முன்மொழிகள் | :............................................................................................................ 2 |
| | ............................................................................................................ 3 |
| வழிமொழிபவர் | :............................................................................................................ 2 |
| | ............................................................................................................ 3 |
| | ............................................................................................................ |
| | என்ற பதவிக்குப் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குச் சம்மதிக்கின்றேன். |
| | ............................................................................................................ 4 |
| | ............................................................................................................ |
| | என்ற பதவிக்கு/பதவிகளுக்குப் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு நான் விரும்பவில்லை. 5 |
| | ............................................................................................................ 6 |

1. பதவியைக் கூறவும், அதாவது, தலைவர், துணைத்தலைவர் அல்லது பேரவை உறுப்பினர்.
2. பெயர்.
3. கையொப்பம்.
4. ஏற்புடையதல்லாததை நீங்கிவிடவும் அல்லது விட்டுவிடவும்.
5. பதவியைக் கூறவும், அதாவது, தலைவர், துணைத்தலைவர் அத்துடன்/அல்லது பேரவை உறுப்பினர்.
6. வேட்பாளரின் கையொப்பம்.

பெயர் நியமனங்கள்,.................... ஆம் ஆண்டு.......................... மாதம்......................... ஆந் திகதிக்குப் பிந்தாமல் (திகதியை உட்புகுத்தவும்) பிரதான நிறைவேற்று அலுவலரை வந்தடைதல் வேண்டுமென்பதையும் அத்தகைய திகதியன்று பி. ப. 4.00 மணிக்கு முடிவடையுமென்பதையும் கவனிக்கவும்.

உமது பெயர் நியமனங்களை நேரடியாகப் பிரதான நிறைவேற்று அலுவலரிடம் கையளிக்கவும், அவர் உடனடியாக உமக்குப் பற்றுச்சீட்டொன்றை வழங்குவார், அல்லது பெயர் நியமனங்கள் முடிவடையும் திகதிக்கு முன்னர் பிரதான நிறைவேற்று அலுவலரை வந்தடையும் வகையில் உமது பெயர் நியமனங்களைப் பதிவஞ்சல் மூலம் அனுப்பவும், அஞ்சல் மூலம் பெயர் நியமனங்கள் பெறப்பட்டதிலிருந்து மூன்று நாட்களினுள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

*3- 1026/3*

---

*ச.வ.பீ. 01/2013*

**2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகச் சட்டம்**

*19 ஆம் பிரிவின் கீழான விதிகள்*

*2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க. சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகச் சட்டத்தின் பிரிவு 19 ஆம் பிரிவின் கீழ் பேரவைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் பேரவையினால் ஆக்கப்பட்டவையும், கூட்டுறவுகள் மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவையுமான விதிகள்.*

தலைவர்,
சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக்
கணக்காளர் நிறுவகம்.

கொழும்பு,
*2014, மாச்சு 5.*

விதிகள்

*1. இவ்விதிகள் 2013 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவக (உயர்தொழில்சார் துர்நடத்தை) விதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*2. (1) நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவுள்ள எவரேனும் தனியாள் உயர்தொழில்சார் துர்நடத்தைக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளமை காரணமாகக் கணக்காளர் அல்லது நிதி முகாமையாளர் ஒருவரின் உயர்தொழிலைப் புரிவதற்கு அவர் தகுதியற்றவரெனப் பேரவை திருப்திப்படின், அவரை உறுப்பினர் நிரலிலிருந்து நீக்கலாம்.*

*(2) ஓராம் பந்தியின் கீழ் எவரேனுமாளை உறுப்பினர் நிரலிலிருந்து நீக்குதலானது, அவ்வாள் கணக்காளர் அல்லது நிதி முகாமையாளர் ஒருவரின் உயர்தொழிலைப் புரிவதற்குத் தகுதியுடையவரெனப் பேரவை திருப்திப்படின், அவரை அடுத்துப்பின்னர் மீளவும் உறுப்பினர் நிரலிற் சேர்ப்பதிலிருந்து பேரவையைத் தடுத்தலாகாது,*

*3. (1) ஆளெவரும், அத்தகைய ஆள் உயர்தொழில்சார் துர்நடத்தைக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார் என்ற பொருள்பட்ட அறிக்கையொன்றை ஒழுக்காற்றுக் குழுவொன்று விசாரணைக்குப் பின்னர் செய்திருந்தாலொழிய, விதி 2 (1) இன் கீழ் பேரவையினால் உறுப்பினர் நிரலிலிருந்து நீக்கப்படுதலாகாது.*

*(2) (அ) பேரவையானது அதற்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டின் மீது அல்லது வேறுவகையாக அல்லது அதன் சொந்த அவதானிப்புகளின் மூலம், நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவுள்ள எவரேனுமாள் உயர்தொழில்சார் துர்நடத்தைக்குக் குற்றவாளியாகவிருந்துள்ளாரா அல்லது அத்தகைய ஆளுக்கெதிராக உயர்தொழில்சார் துர்நடத்தை பற்றிய முதற்தோற்றவளவிலான வழக்கொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என நம்புவதற்குப் பேரவைக்கு நியாயமான காரணம் உள்ளவிடத்து விசாரணை செய்து பேரவைக்கு அறிக்கையிடுவதற்கெனக் குறைந்தபட்சம் மூன்று உறுப்பினர்களையேனும் கொண்டுள்ள புலனாய்வுக் குழுவொன்றைப் பேரவை நியமிக்கலாம் ;*

*(ஆ) உறுப்பினரொருவருக்கெதிராக உயர்தொழில் துர்நடத்தை பற்றி முதற்தோற்றவளவிலான வழக்கொன்று தாபிக்கப்பட்டுள்ளதென (அ) என்னும் உட்பந்தியின் கீழ்த்தாபிக்கப்பட்ட புலனாய்வுக் குழு பேரவைக்கு அறிக்கையிடுமிடத்து, பேரவையானது, செய்யப்பட்ட முறைப்பாட்டின் மீது அல்லது வேறுவகையாக அல்லது அதன் சொந்த அவதானிப்புகளின் மூலம் அத்தகைய உறுப்பினரின் நடத்தை பற்றி விசாரணை செய்யும் நோக்கத்துக்காக ஒழுக்காற்றுக் குழுவொன்றை நியமித்தல் வேண்டும் ;*

*4. ஒழுக்காற்று குழுவொன்று, அத்தகைய குழுவின் முன்னர் சான்றளிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற எல்லா ஆட்களுக்கும் சத்தியங்களை அல்லது உறுதியுரைகளை எடுத்தோதுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், சத்தியஞ் செய்வதற்கு அல்லது உறுதியுரை மொழிவதற்கு அல்லது எந்தக் கருமம் தொடர்பில் விசாரணை நடாத்தப்படுகின்றதோ அந்த ஏதேனும் கருமம் சம்பந்தமாக அவரிடம் கேட்கப்படக்கூடிய அத்தகைய கேள்விகளுக்கு மறுமொழியிறுப்பதற்கு மீறுகின்ற எவரேனுமாள் சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும்.*

*5. ஒழுக்காற்றுக் குழுவொன்றின் முன்னர், சத்தியத்தின் மீதான அல்லது உறுதியுரையின் மீதான விசாரணையில் வேண்டுமென்று பொய்யான சான்றையளிக்கின்ற ஒவ்வொராளும் சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.*

*6. வருகை தருவதற்கு அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பிப்பதற்கு ஒழுக்காற்றுக் குழுவினால் அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டுள்ள எவரேனுமாள், அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் நியாயமான காரணமின்றி விடயத்துக்கேற்ப வருகை தருவதற்கு அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பிப்பதற்கு தவறினால், அவர் சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.*

*7. இவ்விதிகளுக்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகள், விதி 3 (2) (ஆ) இன் கீழ் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் குழுக்களின் அமைப்பும், அவற்றினால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைகளும், அத்தகைய குழுக்களினால் நடாத்தப்பட்ட விசாரணைகளிலான நடவடிக்கைகள் மற்றும் அத்தகைய குழுக்களினால் பிரயோகிக்கப்படற்பாலனவான தத்துவங்கள் என்பன தொடர்பான ஏற்புடையனவாதல் வேண்டும்.*

*8. அமைச்சர், பேரவையின் விதப்புரையின் மேல், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம், இவ்விதிகளுக்கான முதலாம் அட்டவணையினதும், இரண்டாம் அட்டவணையினதும் ஏற்பாடுகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் திருத்தலாம், மாற்றலாம் அல்லது அவற்றுக்கெதனையும் சேர்க்கலாம் அல்லது அவற்றை இல்லாதொழிக்கலாம்.*

*9. பேரவையானது, 2 ஆம் விதியினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தைப் பிரயோகிப்பதற்குப் பதிலாக, ஆளொருவரை எச்சரிக்கலாம் அல்லது கண்டிக்கலாம் அல்லது பேரவை தகுதியானதெனக் கருதக்கூடியவாறான காலப்பகுதிக்கு உறுப்பாண்மையிலிருந்து இடைநிறுத்தலாம் அல்லது பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றை விதிக்கலாம் அல்லது அத்தகைய குற்றப்பணத்தை விதிப்பதுடன் அத்தகைய இடைநிறுத்துகையையும் அல்லது எச்சரிக்கையையும் அல்லது கண்டனத்தையும் வழங்கலாம்.*

*10. 2 ஆம் விதியின் அல்லது 3 ஆம் விதியின் கீழான பேரவையின் முடிபினால் இன்னலுற்றவரான எவரேனுமாள், அத்தகைய முடிபுக்கெதிராக, நிறுவகத்தின் மூன்று சிரேட்ட உறுப்பினர்களைக் கொண்ட, பேரவையினால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவுக்கு முதல் சந்தர்ப்பத்தில் மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய குழுவின் முடிபினால் இன்னலுற்றவரான ஆளொருவர் அத்தகைய குழுவின் முடிபுக்கெதிராக உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.*

11. இவ்விதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய :-

''சட்டம்'' என்பது, 2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கண்காளர் நிறுவகச் சட்டம் என்று பொருளாகும் ;

''பேரவை'' என்பது, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் பேரவை என்று பொருளாகும் ;

''உயர்தொழில்சார் துர்நடத்தை'' என்பது, இவ்விதிகளுக்கான இரண்டாம் அட்டவணையில் அப்போதைக்குக் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயல் அல்லது செய்யாமை என்று பொருளாகும்.

விதி

முதலாம் அட்டவணை

ஒழுக்காற்றுக் குழுக்களின் அமைப்பும், அவற்றினால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைகளும்

1. நிறுவகத்தின் எவரேனும் உறுப்பினரின் சார்த்தப்பட்ட துர்நடத்தை தொடர்பில் நடாத்தப்படவேண்டிய ஏதேனும் விசாரணையின் நோக்கங்களுக்காகப் பேரவையானது, ஓர் ஒழுக்காற்றுக் குழுவை அமைப்பதற்கு அதன் உறுப்பினர்களிடையேயிருந்து திருவுளச்சீட்டின் மூலம் மூன்று ஆட்களை நியமித்தல் வேண்டுமென்பதுடன், அவர்களுள் ஒருவரைக் குழுவின் தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.

2. (1) ஒழுக்காற்றுக் குழுவினர் புலனாய்வு செய்யப்படவேண்டிய குற்றச்சாட்டுகளை எடுத்துக்காட்டி பேரவையானது ஒரு கூற்றைத் தயாரிக்கப்படச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், பிரதான நிறைவேற்று அலுவலர், அக்கூற்றின் பிரதியொன்றை ஒழுக்காற்றுக் குழுவின் ஒவ்வொர் உறுப்பினருக்கும் மற்றும் எவ்வாளின் நடத்தையானது புலனாய்வின் கீழுள்ளதோ அவ்வாளுக்கும் அனுப்புதலும் வேண்டும்.

(2) எவரேனுமாளினாலான துர்நடத்தையைச் சார்த்துகின்ற ஒரு மனுவின் அல்லது முறைப்பாட்டின் விளைவாக விசாரணை நடாத்தப்படவுள்ளவிடத்து, பிரதான நிறைவேற்று அலுவலர், மேலதிகமாக, அம்மனுவின் அல்லது முறைப்பாட்டின் பிரதியொன்றை அத்தகைய ஆளுக்கும் மற்றும் ஒழுக்காற்றுக் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அனுப்புதல் வேண்டும். விசாரணையானது வேறுவகையாக அல்லது பேரவையின் சொந்த அவதானிப்புகளின் மூலம் நடாத்தப்படின், பேரவையானது அத்தகைய அவதானிப்புகளின் மீது அதன் கூற்றுப் பற்றிய காரணத்தை எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

3. (1) பிரதான நிறைவேற்று அலுவலர், எந்த ஆளின் நடத்தை புலனாய்வின் கீழுள்ளதோ அந்த ஆளுக்கு, விசாரணைக்காக நிர்ணயிக்கப்பட்ட முதலாவது திகதி பற்றிய அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும். அத்தகைய ஒவ்வோர் அறிவித்தலும், விசாரணைக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதிக்குக் குறைந்தபட்சம் பதினான்கு நாட்களுக்கு முன்னரேனும், அவ்வாளின் கடைசி வதிவிடம் எனவறியப்பட்ட இடத்தில் நேரடியாக ஒப்படைக்கப்படுதல் வேண்டும் அல்லது அவ்விடத்துக்கு முகவரியிடப்பட்ட பதிவுக் கடிதத்தின் மூலம் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின் கீழ் எந்த ஆளுக்கு அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் ஆள் நேரடியாகத் தோன்றத் தவறுமிடத்து அல்லது ஒரு வழக்குரைஞரினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படாதவிடத்து, விசாரணையானது, ஒழுக்காற்றுக் குழுவினால் அவர் இல்லாமலே நடாத்தப்படலாம்.

(3) விசாரணையானது எத்திகதிக்கு ஒத்திவைக்கப்படலாமோ அத்திகதி பற்றிய அறிவித்தல், எந்த ஆளின் நடத்தை விசாரணையின் விடயமகாவுள்ளதோ அந்த ஆளுக்கு ஒழுக்காற்றுக் குழுவினால் நேரடியாகக் கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது (1) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கொடுக்கப்படுதல் வேண்டும்.

4. (1) எவரேனுமாளின் சான்று, அல்லது எவரேனுமாளினால் ஏதேனும் ஆவணம் காண்பிக்கப்படுதல், ஒழுக்காற்றுக் குழுவினால் ஏதேனும் கருமம் புலனாய்வு செய்யப்படுவதனை இயலச் செய்வதற்கு அவசியமாகவுள்ளதெனப் பேரவை அபிப்பிராயப்படின், அவ்வாளின் கடைசி வதிவிடம் எனவறியப்பட்ட இடத்தில் நேரடியாக ஒப்படைக்கப்படவேண்டிய, அல்லது அவ்விடயத்துக்கு முகவரியிடப்பட்ட பதிவுக் கடிதத்தின் மூலம் தபாலில் அனுப்பப்படவேண்டிய அறிவித்தலொன்றில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்திலும், இடத்திலும் அவ்வாள் வருகை தருவதனை, அல்லது அவ்வாளினால் அத்தகைய ஆவணம் காண்பிக்கப்படுவதனைத் தேவைப்படுத்தும்படி பேரவையானது பிரதான நிறைவேற்று அலுவலரைப் பணித்தல் வேண்டும்.

(2) பேரவையின் அப்போதைக்கான பிரதான நிறைவேற்று அலுவலர் ஒவ்வோர் ஒழுக்காற்றுக் குழுவினதும் செயலாளராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இவ்விதிகளின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் அறிவித்தலும் அவரினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும். அவர் குழுவின் நடவடிக்கைகளைப் பதிதலும் வேண்டும்.

(3) எந்த ஆளின் நடத்தை விசாரணையொன்றில் புலனாய்வின் கீழுள்ளதோ அந்த எவரேனும் ஆள் அல்லது அத்தகைய விசாரணையில் எவ்வகையிலும் சம்பந்தப்பட்ட அல்லது உட்கிடையாகச் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆள், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சட்டத்தரணிகளினால் அல்லது நிறுவகத்தின் எவரேனும் உறுப்பினரினால் விசாரணையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படலாம். சான்றை நெறிப்படுத்துவதிலும், பெறுவதிலும், ஒழுக்காற்றுக் குழுவுக்கு உதவும்படி எவரேனும் சட்டத்தரணிக்கு அல்லது நிறுவகத்தின் எவரேனும் உறுப்பினருக்குப் பேரவை அதிகாரமளிக்கலாம்.

(4) ஓர் ஒழுக்காற்றுக் குழுவினால் நடாத்தப்பட்ட ஒவ்வொரு விசாரணையும், பேரவை வேறுவகையாகத் தீர்மானித்தாலொழிய இரகசியமாக நடாத்தப்படுதல் வேண்டும்.

*(5) ஒழுக்காற்றுக் குழுவொன்றின் முன்னரான ஏதேனும் பிரச்சினை அத்தகைய குழுவின் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் முடிபின் மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.*

*(6) விசாரணையொன்று முடிவுற்றதன் மேல், ஒழுக்காற்றுக் குழு, எக்கருமங்கள் மீது விசாரணை நடாத்தப்பட்டதோ அக்கருமங்களின் மீதான முடிவெடுப்புகளைக் கொண்டுள்ள அறிக்கையொன்றைத் தயாரித்து அதனைப் பேரவைக்கு அனுப்புதல் வேண்டுமென்பதுடன், எவ்வாளின் நடத்தை விசாரணையின் விடயமாகவிருந்ததோ, அவ்வாளுக்கு அறிக்கையின் பிரதியொன்றை அனுப்பச் செய்வித்தலும் வேண்டும்.*

*(விதி 11)*

### *இரண்டாம் அட்டவணை*

### *சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் ஒழுக்கவியல்சார் நடத்தை பற்றிய நியமங்கள்*

*1.* IFAC *இனால் 2010 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒழுக்கவியற் கோவையும் மற்றும் அடுத்துப்பின்னரான திருத்தங்களும்,* CMA *உறுப்பினர்களுக்கு ஏற்புடையற்பாலதான ஒழுக்கவியற் கோவையாகவிருக்கும்.*

*2. ஒழுக்கவியல்சார் நடத்தை பற்றிய நியமங்கள்.*

*தொழில் புரிகின்ற முகாமைத்துவக் கணக்காளர்கள் மற்றும் நிதி முகாமையாளர்களுக்கான ஒழுக்கவியல்சார் நடத்தையின் சில நியமங்கள் உயர்தொழிலில் ஒழுக்கவியல்சார் நடத்தை எவ்வாறு புரியப்படவேண்டுமென்பதை வெளிப்படுத்துகின்றன.*

*“உயர்தொழில்சார் துர்நடத்தை” என்பது, கீழே தரப்பட்டுள்ள செயல்களுள் அல்லது செய்யாமைகளுள் ஏதேனுமொன்று என்று பொருளாகும். அவை, நிறுவகத்தை உயர்மதிப்புள்ளதாக வைத்திருக்கும் வகையில், தகுதி, அந்தரங்கத்தன்மை, நேர்மை, புறவயத்தன்மை மற்றும் நன்னடத்தை என்பன தொடர்பானவை ஆகும்.*

*பின்வரும் நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்கு உறுப்பினர்களுக்குப் பொறுப்புண்டு :-*

*தகுதி*

*(1) அவர்களின் அறிவினதும் தேர்ச்சிகளினதும் தொடர்ச்சியான அபிவிருத்தியின் மூலம் உயர்தொழில் சார் தகுதியின் தோதான மட்டத்தைப் பேணுதல்.*

*(2) இயைபான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் தொழினுட்பத் தேர்ச்சிகளுக்கிணங்க அவர்களின் உயர்தொழில்சார் கடமைகளைப் புரிதல்.*

*(3) இயைபான மற்றும் நம்பகமான தகவல்களின் தோதான பகுப்பாய்வுகளின் பின்னர், பூரணமானவையும் மற்றும் தெளிவானவையுமான அறிக்கைகளையும் விதப்புரைகளையும் தயாரித்தல்.*

*அந்தரங்கத்தன்மை*

*(1) அதிகாரமளிக்கப்பட்டபோது தவிர தமது பணியின்போது பெறப்பட்ட அரசாங்கத் தகவல்களை வெளிவிடுவதனை, தகுதிவாய்ந்த சட்ட நீதிமன்றமொன்றினால் அவ்வாறு செய்யுமாறு சட்டப்படி கடப்பாடுடையவராகவிருந்தாலொழிய, தவிர்த்தல்.*

*(2) கீழ் நிலை அலுவலர்கள் அவர்களின் பணியின்போது பெற்ற தகவல்களின் அந்தரங்கத்தன்மை தொடர்பாகத் தோதானவாறு அவர்களுக்கு அறிவித்தல் மற்றும் அவ் அந்தரங்கத் தன்மையைப் பேணுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவர்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தல்.*

*(3) அவர்களின் பணியின்போது பெறப்பட்ட அந்தரங்கத் தகவல்களை, ஒன்றில் நேரடியாக அல்லது முன்றாந் திறத்தவர்களினூடாக ஒழுக்கவியல்சார் அல்லது சட்டவிரோதமான அனுகூலத்துக்காகப் பயன்படுத்துவதனை அல்லது பயன்படுத்துவதாகத் தோன்றுவதனைத் தவிர்த்தல்.*

*(4) உள்ளபடியான அல்லது வெளிப்படையான அக்கறை முரண்பாடுகளைத் தவிர்த்தல் மற்றும் ஏதேனும் நிகழ்தகு முரண்பாடு பற்றித் தோதான எல்லாத் திறத்தவர்களுக்கும் மதியுரையளித்தல்.*

*(5) பாரபட்சமின்றி அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான அவர்களின் இயலுமையை நேரடியாகவும் கணிசமான அளவிலும் பங்கப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுவதனைத் தவிர்த்தல்.*

*(6) அவர்களின் நேர்மையின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய அல்லது செல்வாக்குச் செலுத்துவதாகத் தோன்றக்கூடிய ஏதேனும் கொடையை, சலுகையை அல்லது விருந்தோம்பலை மறுத்தல்.*

*(7) ஒன்றில் முனைப்பான முறையிலோ அல்லது முனைப்பற்ற முறையிலோ அவர்களின் ஒழுங்கமைப்பினது எய்துகையை அல்லது சங்கத்தின் சட்ட முறையான மற்றும் ஒழுக்கவியல்சார் குறிக்கோள்களைக் கெடுப்பதனைத் தவிர்த்தல்.*

(8) புறவயமான முடிவை அல்லது ஏதேனும் உயர்தொழில்சார் ஒப்படையின் வெற்றிகரமான புரிகையைத் தடைசெய்யக்கூடிய உயர்தொழில்சார் வரையறைகளை அல்லது வேறு மட்டுப்பாடுகளை ஏற்றங்கீகரித்தல் மற்றும் அறிவித்தல்.

(9) சாதகமற்ற மற்றும் சாதகமான தகவல்களையும் மற்றும் இயைபான உயர்தொழில்சார் முடிபுகளையும் அல்லது விருப்புத் தெரிவுகளையும் அறிவித்தல்.

நன்னத்தைப் புறவயத்தன்மை

(1) உயர்தொழிலுக்கு அல்லது நிறுவத்துக்கு நயக்கேடு ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அல்லது அதற்கு ஆதரவளிப்பதனைத் தவிர்த்தல்.

(2) இயைபான செயல்நுணுக்கத் தகவல்களை நியாயமாகவும் புறவயமாகவும் அறிவித்தல்

(3) முன்வைக்கப்பட்ட அறிக்கைகள், கருத்துரைகள் மற்றும் விதப்புரைகள் என்பவற்றை உட்கருதப்பட்ட பயன்படுத்துபவர் புரிந்துகொள்வதன் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு நியாயமாக எதிர்பார்க்கப்படக்கூடிய இயைபான எல்லாத் தகவல்களையும் முழுமையாக வெளிவிடுதல்.

3. (அ) உறுப்பினரொருவர் எல்லா நேரங்களிலும் பின்வருமாறு செயலாற்றுவார் :-

(i) பகிரங்கத் தேவைகளுக்கான பொறுப்புடனும் நம்பிக்கையுடனும் ;

(ii) அத்தகைய உறுப்பினரின் இணைப்பாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் தொழில்தருநர்களுக்கான மரியாதையுடனும், பற்றுறுதியுடனும் ; அத்துடன்

(iii) உயர்தொழில்சார் அபிவிருத்தி, தனிப்பட்ட கௌரவம் பற்றிய உயர்வான இலட்சியங்களில் ஈடுபாடு மற்றும் உயர்தொழில்சார் நேர்மை என்பவற்றினூடான தகுதியுடன்

(ஆ) உறுப்பினரொருவர் -

(i) எல்லா நேரங்களிலும் சிந்தனை மற்றும் செயல் பற்றிய சுதந்திரத்தைப் பேணுதல் வேண்டும் ;

(ii) எல்லா நிகழ்வுகளும் பற்றி அறிந்துள்ள ஒருவரினால் அவரது அல்லது அவளது அபிபப்பிராயம் சுதந்திரமானது, புறவயமானது மற்றும் பாரபட்சமற்றது எனக் கருதப்படுவதற்கு அத்தகைய உறுப்பினர் எதிர்பார்க்கின்றாராவென்பதைத் தீர்மனிப்பதற்கு அவரது அல்லது அவளது வாடிக்கையாளருடன் அவரது அல்லது அவளது உறவுமுறையை முதலில் மதிப்பீடு செய்யாமல் முகாமைத்துவக் கணக்கியல் ஒப்படைகளைப் பொறுப்பேற்றலோ அல்லது நிதி அறிக்கைகள் அல்லது கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தைத் தெரிவித்தலோ ஆகாது; அத்துடன்

(iii) நிதி அறிக்கைகளை அல்லது கூற்றுக்களைத் தயாரிக்கும்போது அல்லது நிதி அறிக்கைகளின் மீது அல்லது கூற்றுக்களின் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும்போது, அத்தகைய நிதி அறிக்கைகளை அல்லது கூற்றுக்களைப் பிழைவழியுய்பனவாக்காதிருப்பதற்கென அத்தகைய உறுப்பினர் தாம் அறிந்துள்ள முக்கியமான எல்லா நிகழ்வுகளையும் வெளிவிடுதல் வேண்டும், அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதனை அனுமதிப்பதற்குப் போதிய தகவல்களைப் பெறுதல் வேண்டும் மற்றும் முக்கியமான எல்லாப் பின்கூற்றுகளையும் அல்லது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நெறிகளிலிருந்தான விலகுதல்களையும் அறிக்கையிடுதல் வேண்டும்.

(இ) உறுப்பினரொருவர் -

(i) அத்தகைய உறுப்பினரினது தொழில்தருநரின் அல்லது வாடிக்கையாளரின் அலுவல்கள் சம்பந்தமான எவையேனும் அந்தரங்கத் தகவல்களை, அவரது அல்லது அவளது கடமைகளின் நெறியில் செயலாற்றுகையில் ஒழிய அல்லது அத்தகைய தகவல்கள், ஏதேனும் சட்டத்துடர்ச்சியில் அல்லது வேறு சட்ட நடவடிக்கையில் அல்லது பேரவை அல்லது நிறுவகத்தின் ஏதேனும் குழு அவற்றின் கடமைகளை முறையாகப் பிரயோகிக்கையில் அவற்றின் கட்டளையினால் அல்லது சட்டமுறையான அதிகாரத்தினால் சார்த்தப்பட்ட உயர்தொழில்சார் துர்நடத்தைக்கெதிராக, ஆனால் அத்தகைய நோக்கத்துக்கு அவசியமான அளவுவரை மட்டுமே, அவர் அல்லது அவள் அல்லது எவரேனும் இணையாளர் அல்லது ஊழியர் என்போரின் ஏதேனும் எதிர்வாதத்தின் நெறியில் வெளிவிடப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டால் தவிர, வெளிவிடுதலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது.

(ii) எந்த முகாமைத்துவக் கணக்கீட்டு ஒப்படையில் அத்தகைய உறுப்பினரின் தொழில்தருநர் அல்லது வாடிக்கையாளர் தமக்கு அறிவிக்கப்படுவதற்கு நியாயமான முறையில் எதிர்பார்ப்பாரோ அந்த முகாமைத்துவக் கணக்கீட்டு ஒப்படையிலான எவையேனும் தொழில் தொடர்புகள் அல்லது அக்கறைகள் பற்றி அவரது அல்லது அவளது தொழில் தருநருக்கு அல்லது வாடிக்கையாளருக்கு அறிவித்தல் வேண்டும் ;

(iii) அத்தகைய உறுப்பினரின் தொழில்தருனரினது அல்லது வாடிக்கையாளரினது சார்பில் அவரது அல்லது அவளது கடமைகளைப் பிரயோகிக்கும் தொழிலில், அத்தகைய தொழில்தருநர் அல்லது வாடிக்கையாளர் அறியாமல் அல்லது அரவது சம்மதமின்றி ஏதேனும் கட்டணத்தை, ஊதியத்தை அல்லது நன்மையை வைத்திருத்தலாகாது, பெறுதலாகாது, அதற்காகப் பேரம் பேசுதலாகாது அல்லது அதனைக் கொள்ளுதலாகாது; அத்துடன்

(iv) ஆலோசகராக ஏதேனும் ஈடுபாட்டை ஒழுங்கேற்பாடு செய்கையில், பணி தொடக்கப்படுவதற்கு முன்னர் அதன் நோக்கெல்லையையும் குறிக்கோள்களையும் தெளிவாகப் புரிந்து கொள்வதனை நிலைநாட்டுவதற்கு நியாயமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும் என்பதுடன், ஈடுபாடு தொடங்குவதற்கு முன்னர் விரும்பத் தக்கதாக ஆனால் எவ்விடயத்திலும் அதன்பின்னர் இயன்றளவு விரைவாக, ஆகுசெலவு பற்றிய மதிப்பீடொன்றை வாடிக்கையாளருக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(ஈ) உறுப்பினரொருவர் -

(i) நயநாகரிகத்துடனும் மற்றும் நல்லெண்ணத்துடனும் அவர் அல்லது அவள் மற்றைய உறுப்பினர்களுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும் ;

(ii) முகாமைத்துவக் கணக்கியல் என்ற உயர்தொழிலுக்கு அல்லது நிறுவகத்துக்கு நயக்கேடு ஏற்படுத்தக்க செயலொன்றைப் புரிதலாகாது ;

(iii) நிறுவகத்தின் அபிப்பிராயத்தில், ஒரு முகாமைத்துவக் கணக்காளரின் உயர்தொழில்சார் ஒழுக்கவியலுக்கு ஒவ்வாததான ஆலோசனையளித்தலில் அல்லது ஏதேனும் தொழிலில் அல்லது தான்புரிதொழிலில் ஈடுபடுதலாகாது ;

(iv) தொழில்தருநருக்காக இன்னோர் உறுப்பினரின் பணியை மீளாய்வதற்கான ஏதேனும் ஈடுபாட்டை, அவ்வுறுப்பினரின் அறிவுடனும் எழுத்திலான சம்மதத்துடனும் தவிர, அல்லது பணி சம்பந்தமாக அவ்வுறுப்பினரின் தொடர்பு முடிவுறுத்தப்பட்டுள்ளவிடத்துத் தவிர, எல்லா உறுப்பினர்களினதும் அறிவுக்குட்பட்டவாறு அவ்வுறுப்பினர் அவரது அல்லது அவளது பொறுப்புக்களின் வழமையான பகுதியாக மற்றவர்களின் பணியை மீளாய்வு செய்தாலொழிய ஏற்றுக்கொள்ளுதலாகாது ;

(v) முகாமைத்துவக் கணக்கீட்டுப் பணியைப் பெறுவதில் ஏதேனும் மேலதிக வருவாயை அல்லது தரகைச் செலுத்துவதன் மூலம் அல்லது ஏற்றுக்கொள்வதன் மூலம் மற்றைய உறுப்பினர்களின் மீது ஏதேனும் நியாயமற்ற அனுகூலத்தைப் பெறுவதற்கு எத்தனித்தலாகாது ;

(vi) செய்யப்பட்ட முகாமைத்துவக் கணக்கீட்டுப் பணிக்காகப் போதிய பிரதிபயன் என்ற நெறியைப் போற்றிக்காத்தல் வேண்டும் ; அத்துடன்

(vii) தீய எண்ணத்துடன் அல்லது இன்னோர் உறுப்பினரின் பகிரங்க அல்லது உயர்தொழில்சார் நற்பெயரை அல்லது தொழிலைப் பாதகமான முறையில் பிரதிபலிக்கக்கூடிய வேறெதேனும் வழியில் செயலாற்றுதலாகாது;

(உ) உறுப்பினரொருவர் -

(i) எல்லா நேரங்களிலும், காலத்துக்குக்காலம் பேரவையினால் குறித்துரைக்கப்பட்ட தகுதி பற்றிய நியமங்களைப் பேணுதல் வேண்டும் ;

(ii) எந்த அறிவை முகாமைத்துவக் கணக்கீட்டு உயர்தொழில் அடிப்படையாகக் கொண்டுள்ளதோ அந்த அறிவை நிறுவகத்தினால் கோரப்படும்போது அல்லது தேவைப்படுத்தப்படும்போது உயர்தொழிலினுள் உள்ள ஏனையோருக்குப் பரப்புதல் வேண்டும் என்பதுடன், பொதுவாக உயர்தொழிலினதும் நிறுவகத்தினதும் முன்னேற்றத்தை மேம்படுத்துதலும் வேண்டும் ;

(iii) அவரது அல்லது அவளது பயிற்சியின் அல்லது அவர் அல்லது அவள் புரிவதற்குத் தகுதியுள்ளவறான அத்தகைய பணியை மட்டுமே பொறுப்பேற்றல் வேண்டுமென்பதுடன், ஒரு தொழில்தருநரின் அல்லது வாடிக்கையாளரின் மிகச்சிறந்த அக்கறைகளுக்கானதாக இருக்கக்கூடியவிடத்து, ஏனைய சிறப்பறிஞர்களையும் ஈடுபடுத்துவார், அல்லது ஈடுபடுத்தும்படி தொழில்தருநருக்கு அல்லது வாடிக்கையாளருக்கு மதியுரையளிப்பார் ;

(iv) நிறுவகத்தின் நற்பெயரை, மதிப்பை அல்லது புகழை உட்படுத்துகின்ற, உறுப்பினரொருவரின் ஏதேனும் தகுதியற்ற, ஒழுக்கவியல்சாரா, சட்டவிரோதமான அல்லது நியாயமற்ற நடத்தையை அல்லது செயல்முறையை நிறுவகத்தின் முறையான நியாய சபைகளின் முன்னர் வெளிக்காட்டுதல் வேண்டும் ; அத்துடன்

(v) அத்தகைய உறுப்பினர் பங்காளர், முதல்வர் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒருவராக எந்த உயர்தொழில்சார் பங்காண்மையுடன் அல்லது கம்பெனியுடன் இணைந்துள்ளாரோ அந்த உயர்தொழில்சார் பங்காண்மை அல்லது கம்பெனி, முகாமைத்துவக் கணக்கியல் தொடர்பாக நிறுவகத்தினால் நிலைநாட்டப்பட்ட உயர்தொழில்சார் ஒழுக்கவியற் கோவையையும் உயர்தொழில்சார் ஒழுக்கவியல் விதிகளையும் மற்றும் உயர்தொழில்சார் நடத்தை விதிகளையும் கடைப்பிடிப்பதனை உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்தல் வேண்டும்.

4. நிறுவகமானது இடைநிறுத்துகை, குற்றப்பணம், கடிந்துரை அல்லது இவையெல்லாம் அத்துடன் அல்லது பாரதூரமான விடயங்களில் உறுப்பினர் நிரலிலிருந்து நீக்குதல் என்பனவுட்படவும், புலனாய்வு மற்றும் விசாரணை நடவடிக்கை முறைகள், இவ்வுயர்தொழில்சார் சேவையின் ஏதேனும் மீறுதலுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டோரின் மீது விதிக்கப்படவேண்டிய தண்டனைகள் என்பனவுட்படவும் ஒழுக்கவியல்சார் நடத்தைபற்றிய ஏதேனும் மீறுகை பற்றிய அதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் முறைப்பாட்டின் மீது அல்லது வேறு வழிவகைகள் மூலம் முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான விசாரணை நடவடிக்கை முறைகளை வகுத்தமைத்து அதன் அமைப்புவிதியில் விதிமுறையாக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3- 1026/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.